# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 23 செவ்வாய்க்கிழமை (05-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:191


# அரசு - புலிகள் பேச்சை ஐ.தே.க. ஆதரிக்கிறது!

## சென்னையில் ரணில் தெரிவிப்பு

சென்னை,ஜூன்5

**"இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் நடத்தும் எந்தப் பேச்சையும் ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்கின்றது."**

**- இவ்வாறு சென்னையில் பத்திரிகையாளர்களுடன் உரையாடிய போது இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

சென்னையில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்த பின்னர், ரணில் விக்கிரமசிங்க பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே இப்படித் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இலங்கை அரசு புலிகளுடன் பேச்சு நடத்துவதை ஐ.தே.கட்சி வரவேற்கின்றது. தற்போதைய சமாதான முயற்சிகள் வெற்றியடைவதற்கு ஐ.தே.கட்சியிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஒத்துழைப்பைப் பூரணமாக வழங்குவதற்கு ஐ.தே.கட்சி தயாராகவுள்ளது.

சமாதான முயற்சி எந்த வடிவத்தில் அமைந்தாலும் அதை வரவேற்கத் தயாராக உள்ளோம்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சிக் கூட்டணிக்குள் கருத்து வேறுபாடு வலுக்கிறது!

கொழும்பு,ஜூன்5

ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்குள் கருத்து வேறுபாடுகள் வலுத்து வருவதாக 'ரோய்ட்டர்' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

11எம்.பிக்களைக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

'முஸ்லிம்களுக்கென கரையோர கல்முனை மாவட்டம் மே மாதக் கடைசிக்குள் ஸ்தாபிக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். ஆனால் அந்த கால எல்லை காலாவதியாகிவிட்டது' - என்று முஸ்லிம் காங்கிரஸின் எம்.பியான ஆர்.சின்னலெப்பை கூறுகின்றார்.

"இதனால் பொதுமக்கள் ஐக்கிய' முன்னணியுடன் நாங்கள் செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தம் கேள்விக்குள்ளாகியிருக்கின்றது. இந்தப் பிணக்குக் குறித்து புதனன்று ஜனாதிபதியை அரச நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் சந்திக்கும் போது முடிவு செய்யப்படும். இனி நாம் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது ஜனாதிபதியின் முடிவைப் பொறுத்து அமையும்" - என்றும் சின்னலெப்பை குறிப்பிட்டார்.(உ)

## ஆளும் கூட்டணிக் கட்சிகளின் செயலாளர்கள் நாளை கூடுவர்

கொழும்பு,ஜூன்5

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் செயலாளர்கள் நாளை புதன்கிழமை கொழும்பில் கூடிக் கலந்துரையாட உள்ளனர்.

சமாதான முயற்சிகளில் தற்சமயம் ஏற்பட்டிருக்கும் தேக்க நிலையை நீக்குவதற்கு புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்க வேண்டும் என்று அரசிடம் விடுக்கப்பட்டுவரும் வேண்டுகோள்கள் தொடர்பாக அவர்கள் கலந்துரையாடுவர் என்று தெரி விக்கப்படுகிறது.

அமைச்சர் டி.எம்.ஜயரட்ண தலைமையில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகளின் செயலா

(14ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் - ஜெயலலிதா நேற்றுச் சந்திப்பு





கொழும்பு,ஜூன்5

ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தமிழக முதல்வர் ஜெயலலிதாவை சென்னையில் சந்தித்து பேச்சு நடத்தினார்.

சென்னைத் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது இலங்கை நிலைவரம் குறித்தும் இனப்பிரச்சினை தொடர்பான விவகாரங்கள் தொடர்பாகவும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ரணில் விக்கிரமசிங்க விரிவாக எடுத்துக் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

### சமாதானத் தீர்வு எட்டப்படும் வரை

## படையினருக்குத் தேவையான சகலதையும் அரசு வழங்கும்

### கண்டியில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்5

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்படும் வரை முப்படைகளினதும், பொலீஸாரினதும் பயிறசிகள் வலுப்படுத்தப்படும். அவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் அரசு வழங்கும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

கண்டி பல்லேகலவில் படைவீரர் கிராமத்தில் நாட்டுக்காக உயிர்நீத்த படையினரின் குடும்பங்களுக்கு காணி உறுதி வழங்கும் வைபவம் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு ஜனாதிபதி உரையாற்றினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகள் சமாதானப் பேச்சுக்கு வரும்வரை படையினர் யுத்தத்தை

(14ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்கில் 4 முஸ்லிம்கள் கடத்தல்

மட்டக்களப்பு,ஜூன்5

மட்டக்களப்பு மாவட்டம், ஓட்டமாவடியில் அரிசி ஆலை ஊழியர்கள் இருவர் உட்பட 4 முஸ்லிம்கள் இனந்தெரியாத குழு ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டிருப்பதாக வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

மின் பிறப்பாக்கி ஒன்றையும் அந்தக் குழுவினர் அங்கிருந்து கைப்பற்றி எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

### மூன்று பொலீஸார் காயம்

கொழும்பு,ஜூன்5

அம்பாறை நகரிலிருந்து 20 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள தம்பிலுவில் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த புலி உறுப்பினரின் சடலத்தை படையினர் மீட்டுள்ளதாகவும் - இந்த மோதலில் 3 பொலீஸார் காயமடைந்ததாகவும் -

விசேட ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ஓ)

### புலிகளின் மறைவிடங்களை அழிக்க

## கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் நேற்று அதிரடிப் படையினர் பெரும் தேடுதல்

அம்பாறை,ஜூன்5

அம்பாறை கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் மறைவிடங்களைத் தேடி அழிக்கும் நோக்குடன் விசேட அதிரடிப் படையினர் நேற்று பெருமெடுப்பிலான சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்தத் திடீர் நடவடிக்கை நேற்று அதிகாலை ஆரம்பிக்கப்பட்டு மாலை வரை நீடித்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக பெரும் எண்ணிக்கையான விசேட அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் அம்பாறை திருக்கோவில் படை முகாமில் குவிக்கப்பட்டனர்.

நேற்றைய நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளின் களஞ்சியம் ஒன்றைச் சுற்றிவளைத்த படையினர் அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பெருமளவு உணவுப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் குழுக்களுக்கு மாதாந்தம் அரசு வழங்கும் நிதி எவ்வளவு?

### அனுருத்தவிடம் கேள்வி எழுப்ப விநாயகமூர்த்தி முன்னறிவித்தல்

கொழும்பு,ஜூன்5

அரசின் துணைப்படையாக இயங்கும் தமிழ்க் குழுக்களுக்கு மாதாந்தம் அரசு வழங்கும் தொகை எவ்வளவு என்று கோரும் கேள்வி ஒன்றை பாதுகாப்பு அமைச்சரிடம் நாடாளுமன்றில் விடுப்பதற்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தியே இக் கேள்வியை எழுப்பியிருக்கின்றார்.

அவர் எழுப்பியுள்ள வினா வருமாறு:-

பாதுகாப்புப் படைகளுடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் குழுக்களும், படைகளின் சாதாரண கட்டமைப்பு மற்றும் கட்டுப்பாடுகளுக்கு வெளியே இயங்கும் படையினருமே பத்திரிகையாளர்களுக்கு எதிரான மீறல்கள் உட்பட மனித உரிமை மீறல்களுக்கு காரணம் என்று கடந்த 31 ஆம் திகதி தான் வெளியிட்ட செய்திக் குறிப்பில் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

(அ) பாதுகாப்புப் படைகளுடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் குழுக்

(14ஆம் பக்கம் பார்க்க)

### மாநகர சபை உறுப்பினர் பதவியேற்பு

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்.மாநகரசபை உறுப்பினராக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் தெரிவத்தாட்சி அலுவலரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

சபையில் வெற்றிடமாக உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரு உறுப்பினர்களின் இடங்களில் ஒன்றுக்கே கட்சியினால் தெரிவு

(14ஆம் பக்கம் பார்க்க)

### இளைஞனின் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்5

ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவம் ஒன்றில் கொல்லப்பட்டதாகத் தெரிவித்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று பொலீஸாரால் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

24 வயது மதிக்கத்தக்க அந்த இளைஞனிடம் இருந்து மூன்று கைக்குண்டுகளைப் படையினா கைப்பற்றியதாக பொலீஸார் தெரிவித்தனர்.

சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ்.ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-6-15)

### விமான சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம்,ஜூன்5

பலாலிக்கும் - இரத்மலானைக்கும் இடையிலான பயணிகள் விமான சேவை இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறமாட்டாது என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

நாளை விமானசேவை வழமை போல் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (ஓ)

### கிளிநொச்சி அரச செயலகம் திறப்பு

வவுனியா,ஜூன்5

'சத்ஜய' இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இயங்கி வந்த கிளிநொச்சி அரச செயலகம் புனரமைக்கப்பட்டு நேற்று மீண்டும் கிளிநொச்சி நகரில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஏ.ஜயாத்துரை செயலகத்தைத் திறந்து வைத்தார்.

பிறப்பு - இறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் வழங்குவதைத் தவிர அனைத்து செயற்பாடுகளும் இந்தச் செயலகத்தில் உடனடியாக ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

### ஓமந்தையில் ஷெல் வீச்சு

வவுனியா,ஜூன்5

வவுனியாவிலிருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியை நோக்கி நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஓமந்தைப் பகுதியில் பல குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து நேற்று மாலை கரைக

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தடையை நீக்குவதில்லை என்ற அரசின் அறிவிப்பு

# 11 தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் வெள்ளிக்கிழமை கூடி ஆராய்வர்

கொழுமம்பு,ஜூன்5

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட மாட்டாது என அரசு அறிவித்திருப்பது குறித்து ஆராய வென பதினொரு தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பில் கூடி ஆரயவுள்ளனர்.

அமரர்குமார் பொன்னம்பலத்தின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெறும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் அ.விநாயகமூர்த்தி, இ.குமரகுருபரன், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் மாவை சேனாதி ராசா, என்.ரவிராஜ், ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ்அணி) சார்பில் சுரேஷ்பிரே மச்சந்திரன் ரெலோ சார்பில் ஸ்ரீகாந்தா, அடைக்கலநாதன், புளொட் சார்பில் த.சித்தார்த்தன், பீற்றர், தேசிய தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஐயாத்துரை ஆகியோரும் -

மலையக மக்கள் முன்னணி சார்பில் பா.சந்திரசேகரன், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் சார்பில மனோகணேசன் அஸீஸ் தொழிலாளர் காங்கிரஸ்சார்பில் அஷ்ரப் அஸீஸ, இராமநாதன் ஆகியோரும் -

இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் செல்லச்சாமி, முஸ்லீம் ஜக்கிய முன்னணி சார்பில் கபூர் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்வர். (ஐ-7)

# பதினொரு இந்திய மீனவர்கள் நேற்று நீதிவான் முன் ஆஜர்

## 13ஆம் திகதி வரை விளக்க மறியல்

யாழ்ப்பாணம்,ஜூன்5

நெடுந்தீவுக் கடலில் வைத்து கடந்த சனிக்கிழமை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 11 இந்திய மீனவர்கள் நேற்று மாலை ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் அவரது இல்லத்தில் வைத்து ஆஜர் செய்யப்பட்டனர்.

தமிழக இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த என்.கவிந்தன், பி.ராஜா, கே.நாகராஜன், வீ.செல்வம், எஸ்.ஜோன், ஏ.ஆனந்தராசா, ரி.சூசை, எஸ்.வினோ, எம்.முத்து இராமலிங்கம், ஆர்.நாகராசா, கே.பாஸ்கரன் ஆகியோரே நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டவர்களாவர்.

அவர்கள் அனைவரையும் யாழ்.சிறைச்சாலையில் எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கந்தல் ஆடைகளுடன் மிகவும் களைப்புற்ற நிலையில் காணப்பட்ட 11 மீனவர்களும் மாற்றுடையின்றி பெரும் சிரமத்தை அனுபவித்து வருவதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் வாய் பேசமுடியாத மீனவர் ஒருவரும் இருப்பதாகவும் இவர்களுக்கு மாற்றுடைகள் வழங்கி உதவுமாறும் யாழ்ப்பாணத்திலுள்ள தொண்டு நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தீவுப்பகுதி கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட 39 இந்திய மீனவர்கள் கடந்த சில மாதங்களாக யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இந்த 11 மீனவரையும் சேர்த்து தற்பொழுது 50 இந்திய மீனவர்கள் யாழ்.சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ-5-10)

## கண்ணிவெடி மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூன்5

வண்ணார்பண்ணைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் 30 கண்ணி வெடிகளை அகற்றியதாக விசேட ஊடகத தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ)

## கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்.இந்துக் கல்லூரியின் ஜி.ச.ஈ. உயர்தரம் (2002) கணிதம் மற்றும் உயிரியல் பிரிவு மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட கல்விச சுற்றுலா திட்டமிட்டபடி இன்று நடைபெறும் என்றும் -

சுற்றுலாவில் கலந்து கொள்ளும் மாணவர்களை காலை 7.15 மணிக்கு கல்லூரியில் ஒன்று கூடுமாறும் - தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## குடாநாட்டில் கோடை மழை

யாழ்ப்பாணம்,ஜூன்5

குடாநாட்டின் பல பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக கோடை மழை பெய்து வருகிறது.

கடந்த 2ஆம் திகதி 11.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை 7.9 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் நேற்றுப் பிற்பகல் 3 மணி வரை 1.9 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக யாழ்.வளிமண்டல ஆராய்ச்சி அவதானிப்பு நிலைய தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.பிரதீபன் தெரிவித்தார்.

இதேவேளை -

குடாநாட்டில் கடந்த 2 ஆம் திகதி உயர் வெப்பநிலையாக 34.4 டிகிறி செல்சியசும் ஆகக் குறைந்த வெப்பநிலையாக 25.6 டிகிறி செல்சியஸும் நேற்று முன்தினம் உயர் வெப்பநிலையாக 29.5 டிகிறி செல்சியஸும் ஆகக் குறைந்த வெப்பநிலையாக 24.8 டிகிறி செல்சியஸும் பதிவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். .(ஐ-6)

## பிரதேசசெயலருக்கு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்5

கைதடிப் பகுதிக்கு கடமையின் நிமித்தம் சென்ற தென்மராட்சி பிரதேச செயலர் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை கைதடியில் மீளக்குடியமர்ந்த மக்களைச் சந்திப்பதற்காக தனது உத்தியோக பூர்வ வாகனத்தில் சென்ற தென்மராட்சிப் பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளையை கைதடி - கோப்பாய் வீதியிலுள்ள காவலரணில் கடமையாற்றிய இராணுவத்தினர் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை என்றும் -

தென்மராட்சிப் பிரதேச செயலர் என்பதனை அங்கு கடமையில் நின்ற இராணுவத்தினருக்கு அவர் தெரிவித்த போதிலும்'பாஸ்' இல்லாமல் எவரும் கைதடிக்குச் செல்ல முடியாது என்று கூறி படையினர் உள்ளே செல்ல அவரை அனுமதிக்கவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

## விபத்தில் சிக்கி 5வயதுச் சிறுமி படுகாயம்

ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி 5வயதுச் சிறுமி ஒருவர் படுகாயமடைந்தார்.

எழுதுமட்டுவாழில் இருந்து இடம் பெயர்ந்து இளவாலையில் வசித்து வந்த அருந்தவராசா புவிதா என்ற சிறுமியே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-6-15)


உ

**நீராவியடி ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் 10ஆம் திருவிழா விஞ்ஞாபனம்**

*திகதி* : 5.06.2001
*இடம்* : ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய முன்றல்

இவ்விழா சிறப்புற நடைபெறுவதற்கும் குறிப்பிட்ட பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை நீக்கித் தந்தமைக்காகவும், வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களையும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.தவராசா (நா.உ.) அவர்களையும் கே.வி.குகேந்திரன் (ஜெகன் - நா.உ.) அவர்களையும் மனமாரப்பாராட்டி வாழ்த்துகின்றோம்.





**ஆலய உற்சவ நிகழ்ச்சிகள்**

'பெரிய புராணம்' தொடர் சொற்பொழிவாற்றிய உயர் திரு. இரா.செல்வவடிவேல் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார்.

எம்பெருமான் மின் தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வீதியுலா வருவார்.

அதனைத் தொடர்ந்து விசேட நிகழ்ச்சிகளாக ஈழ நல்லூர் சுப்பிரமணியம் குழுவினரின் மேளக் கச்சேரியும் அதனைத் தொடர்ந்து ராகம்ஸ் இசைக்குழுவின் இன்னிசை கானமும் நடைபெறும்.

ஒலி அமைப்பு : கண்ணா சவுண்ட்
ஒளி அமைப்பு : ஆனந்தன்

*நீராவியடி இளைஞர்கள், நீராவியடி.*

(C/16998)


## இதய அஞ்சலி



எமது துறை மாணவனும், நண்பனுமாகிய அ.அரிகரனின் அன்புத் தந்தையார்

**DR.த.அருமைத்துரை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

விரிவுரையாளர், மாணவர்கள்,
கணனித்துறை
*தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை*
*யாழ்ப்பாணம்.* (C/16996)

## றோட்டறி ஆளுநரின் யாழ். விஜயம்








நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த றோட்டறி ஆளுநர் கிரிஷ் ராஜேந்திரன் யாழ்.சைவபரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் யாழ்.றோட்டறிக் கழகமும், கொழும்பு கிழக்கு றோட்டறிக் கழகமும் இணைந்து அமைத்து, சைவபரிபாலன சபைக்கு வழங்கியுள்ள புதிய சிறுவர் பூங்காவை நேற்று மாலை சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டி திறந்து வைப்பதை முதற் படத்திலும், திறப்பு விழாவின் போது (இடமிருந்து வலமாக) றோட்டேரியன் கே.கேதீஸ்வரன் (ஆளுநரின் குழுப் பிரதிநிதி), யாழ்.றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டேரியன் அ.பஞ்சலிங்கம், சைவ பரிபாலன சபைத் தலைவர் இ.மகேந்திரன், ஆளுநர் கிரிஷ் ராஜேந்திரன் ஆகியோர் நிற்பதை இரண்டாவது படத்திலும், நேற்று மாலை யாழ்.றோட்டரிக் கழகத்தின் கூட்டத்தில் ஆளுநர் உரை நிகழ்த்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: கொனிகா கலர் லாப்)*

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னபாக்கியம் இரத்தினம்

தையிட்டிப்புலத்தைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னபாக்கியம் இரத்தினம் 04-06-2001 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இரத்தினத்தின் அன்பு மனைவியும் பரமநாதன், காலஞ்சென்ற செல்வேந்திரன் (சின்னக்கோன், சிமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை), சறோஜினிதேவி (ஜேர்மனி), சகுந்தலாதேவி, பாலேந்திரன் (பாலையா, ஜேர்மனி), சத்தியதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும் நாகரத்தினம், நேமிநாதன், செல்லத்துரை, சிவயோகமலர், குகானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் குபேரன், தட்சாயினி, கௌதமன், அஜித்தா, அனிஜா, அனோஜன், துசியந்தினி, பிரபாலினி, கோபினி, சுகன்ஜா, ஜபிசேக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை நேற்று மல்லாகத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*கல்லாரை,*
*மல்லாகம்.* (C/16997)

தகவல்:
இ.பரமநாதன்
(மகன்)

### திருமதி தங்கமலர் இராசரத்தினம்

(சமாதான நீதிவான் - பதிவுகாரர், புலோப்பளை)

புலோப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கமலர் இராசரத்தினம் நேற்று (04-06-2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இராசரத்தினம் (இளைப்பாறிய இ.போ.ச.சாலைப்பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கிராம விதானையார் ஐயாத்துரை - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் அரியமலர், சிவஞானசுந்தரம் (கனடா), கமலாதேவி, திலகவதி, லோகஞானம் (அஞ்சல் அதிபர் - சுன்னாகம்), விமலாதேவி, குணேஸ்வரி (ஆசிரியை, கொட்டாஞ்சேனை) ஆகியோரின் அன்புச்சகோதரியும் நிரஞ்சன், நிர்ஜனன், துஷ்யந்தி, ராஜந்தி, மயூரன், மகினன், பிரியந்தி, சிந்துஜன், சிவாஜன், அபர்ணா ஆகியோரின் பெரியதாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று (05-06-2001) செவ்வாய்க்கிழமை மாலை 4.00மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*சிவன்கோயில் வீதி,*
*திருநெல்வேலி தெற்கு,*
*யாழ்ப்பாணம்.* (88706)

தகவல்:
ஐ.லோகஞானம்
(சகோதரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாந்தரச் சைக்கிள் ஓட்டம்!

பாடசாலை மாணவர்களும் மற்றும் இளைஞர் யுவதிகளும் சைக்கிள்களில் சமாந்தரமாகச் செல்வதால் உண்டாகும் வீதி விபத்துக்கள், அவை மூலமான உயிர் ஆபத்துக்கள் குறித்து எல்லோரும் பேசிப் பேசிக் களைத்து விட்டார்கள். இப்போது சட்டத்தை அமுல் செய்யும் பொலீஸ் பகுதி அந்தத் தொல்லையை நீக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது.

வீதிகளில் சமாந்தரமாகச் சைக்கிளில் செல்வோர் பிடிபட்டால் அந்த இடத்தில் வைத்து அபராதம் அறவிடப்படும்; வீதிப் போக்குவரத்து விதிகளை மீறியதற்காக வழக்கும் தொடரப்படும் - சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.பொலீஸ் அத்தியட்சகர் (சுப்பிரின்ரென் டென்ட்) குடாஹெட்டி அறிவித்திருக்கிறார் - எச்சரித்திருக்கிறார்!

யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தின் பிரிவுக்கு உட்பட்ட கிராம சேவையாளர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் பொலீஸ் அத்தியட்சகர் இதனை அறிவித்திருக்கிறார்.

குடாநாட்டில் சமீப காலங்களில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவது குறித்து பத்திரிகைகளில் படிக்கிறோம். அதனை எவராலும் இலகுவில் அவதானிக்கவும் முடிகிறது. பொலீஸ் அத்தியட்சகர் புள்ளி விவரங்களை வைத்து இப்போது ஊர்ஜிதமும் செய்துள்ளார்.

இந்த விபத்துக்களுக்குக் காரணமாக இருப்பவர்களில் பெரும்பாலானோர் சமாந்தரமாகச் சைக்கிள் ஓட்டுபவர்கள் என்பதனையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நாளைய இளைஞர்களைப் பற்றியுள்ள புதிய "நவீன" பழக்க வழக்கங்களில் சமாந்தரச் சைக்கிள் ஓட்டமும் ஒன்றாகிவிட்டது. அதனைத் தமக்குரிய "பாஷனா"கவும் ஆக்கி விட்டார்கள். சமாந்தரமாகச் சைக்கிள்களில் வீதிகளை அடைத்தவாறு பயணம் செய்யாவிட்டால் "பொச்சம்" தீராத மாதிரியாகிவிட்டது அவர்களுக்கு!

இளைஞர்கள் மட்டுமென்ன யுவதிகளும் அவர்களுக்குப் போட்டா போட்டியாக சமாந்தரப் பயணம் செய்கிறார்கள். வீதியில் வரும் வாகனங்கள் போடும் "ஹோர்ன்" ஒலிகளுக்குக் கூட அவர்களின் காதுகள் துளைபடுவதில்லை. வேறு உலகத்தில் சஞ்சரிப்பவர்களாக, தங்களுக்குள் வெகு சுவாரஸ்யமாகக் கதைத்துக்கொண்டே சமாந்தரமப் பயணம் செய்வதை நாளும் பொழுதும் காணகிறோம்.

இதனால் பாதசாரிகளும் ஏனைய வாகன ஓட்டுநர்களும் படும் கஷ்டங்கள், நிகழப்போகும் விபத்து என்பன அவர்களின் சிந்தனையில் படுவதில்லை. வீதிகள் போக்குவரத்துக்கானவை; எல்லோருக்கும் பொதுவானவை; தங்களுக்கு எழுதப்பட்ட முதுசமோ அல்லது சீதனமோ அல்ல என்பதனை சிறிதும் உணர்வதில்லை. வீதி விபத்தினால் மற்றவர்களுக்கு மட்டுமன்றித் தங்களுக்கும் உடல், உயிர் ஆபத்து விளையும் என்பதனையும் பொருட்படுத்துவதில்லை.

சமாந்தரச் சைக்கிள் ஓட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால், யாழ்ப்பாண நகரத்தில் மட்டுமன்றி குடாநாடு முழுவதிலும் வீதி விபத்துக்கள், மரண விபத்துக்கள் மேன்மேலும் அதிகரிக்கும்.

இந்தத் தொல்லைக்கு யார் முற்றுப்புள்ளி வைக்கப்போகிறார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்திருந்த வீதிப் பயணிகளுக்கு, யாழ்.பொலீஸ் அத்தியட்சகரின் அறிவிப்பு பெரும் மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது.

வாகனம் செலுத்தும் விதிகள் தெரியாமலே, வாகன ஓட்டுநர் பயிற்சியோ, லைசன்ஸோ இல்லாமலே, தாம அதிவேக "ஜெற" விமான ஓட்டுநரின் ஆசனத்தில் "குந்திவிட்டதாக" நினைத்துக்கொண்டு, விண் மண் தெரியாமல் மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்கள்மீதும் பொலீஸாரின் பார்வை திரும்ப வேண்டும்.

1995ஆம் ஆண்டுக்கு முன்னர் குடாநாட்டு மக்களின் தேசிய வாகனமாக சைக்கிளே விளங்கியது. ஆனால் இப்போது சைக்கிள்களின் எண்ணிக்கைக்குச் சமனாக மோட்டார் சைக்கிள்களும் பாவனைக்கு வந்துவிட்டன. பாதசாரிகள் ஏனைய வீதிப் பயணிகளின் உயிர்க்கொல்லியாக அவை மாறி வருகின்றன. ஆகையால் அந்தப் பக்கத்திலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

# சுன்னாகத்தில் 30 பேருக்கு மரவேலைப் பயிற்சி டிப்ளோமா

## பெண்களுக்குத் தும்புத் தொழிற்பயிற்சி

வலிகாமம் தெற்கு,ஜூன்5

திருகோணமலை தொழில் திணைக்களத்தின் ஆதரவுடன் சுன்னாகத்தில் அமைந்துள்ள மரவேலை பாடசாலையில் மரவேலைப் பயிற்சி டிப்ளோமா வகுப்புக்களும், பெண்களுக்கான தும்புத் தொழிற் பயிற்சி வகுப்புக்களும் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

கடந்த முதலாம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ள இப்பயிற்சி நெறியில் 30பேர் மரவேலைப் பயிற்சி டிப்ளோமா வகுப்பிலும், 20 பேர் தும்புத் தொழிற்பயிற்சி வகுப்பிலும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

மரவேலைப் பயிற்சி வகுப்புக்கள ஆறுமாத காலத்திற்கும், தும்புத் தொழிற்பயிற்சி வகுப்புக்கள் ஒரு வருடத்திற்கும் நடைபெறும்.

இவ்விரு பயிற்சிகளிலும் கலந்து கொண்டு பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்குவிப்புப் படியாக முப்பது ரூபா வழங்கப்படும். பயிற்சி முடிவில் இவர்களுக்குப் பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன.

## நாட்டு நடப்பு

மும் மணிகள் ஆசி என்பார் புத்தர்
முழுதும் அதன் பொருளறிய மாட்டார்
இம் மண்ணில் பல மணிகள் ஒலித்தும்
இதுவரை பயனென்ன கண்டோம்?
அம்மணி ஆணையிட்டதாலே
அகழ்கின்றார் அறிஞர்கள் கூடி
செம் மணியை அறியாதோர் இந்த
செகத்திலுண்டோ செப்படி தோழி.

*- விகடகவி -*

## இன்றைய மாணவரிடம் கீழ்ப்படிவு, பணிவு இல்லை

# பிள்ளைகளின் கல்வியில் காட்டும் ஆர்வம் போலவே ஒழுக்கத்திலும் பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும்

## அதிபர்களுடனான கலந்துரையாடலில் யாழ்.நீதிவான்

தமது பிள்ளைகளின் கல்வியில் செலுத்தும் ஆர்வத்தைப் போலவே அவர்களின் ஒழுக்கத்திலும் பெற்றோர்கள் கவனம்செலுத்த வேண்டும். பாடசாலைக்கு செல்கின்ற மாணவன் கல்வியை மட்டும் கற்றால் போதாது. ஒழுக்கம், பண்பாடு யாவற்றையும் கற்க வேண்டும். ஒருவன் ஒழுக்கம் தவறினால் அவனது வாழ்வே குட்டிச சுவர் ஆகிவிடும்.

- இவ்வாறு கடந்த சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்ற பாடசாலை அதிபர்களுடனான கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் அத்தியடிப் பகுதியில் நடைபெற்ற தாக்குதல் சம்பவம் [illegible] மாணவர் சமுதாயத்துக்கே இழிவான ஒரு செயலாகும். இந்தச் சம்பவத்துடன் யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் தொடர்புபட்டுள்ளனர். இதற்கு எல்லாம் காரணம் இன்றைய கல்வி முறையே.

பழைய கல்வி முறை அதாவது குருகலக் கல்வி முறையிருந்திருந்தால் இவ்வாறான சம்பவங்கள் ஏற்பட்டிருக்காது. இன்றைய மாணவர்களிடம் கீழ்ப்படிவு, பணிவு எதுவும் இல்லை. சமயப்பற்று இல்லை. சமயப்பாடத்திற்கு அதி விசேட சித்தி எடுத்திருப்பார்கள். ஆனால் சமய விழுமியங்கள், பாரம்பரியங்கள், கலாசாரம்பற்றிய அறிவு இருக்காது.

மாணவர்களின் செயற்பாடுகள் தொடர்பாக நீதித்துறை தனது கடமையைச் செய்யும். அதற்கு அதிபர்கள், ஆசிரியர்களாகிய உங்களது ஒத்துழைப்புத் தேவை. அதற்காக மாணவர்களை வெறுப்பான கண்ணோட்டத்துடன் பார்க்காமல் நல்லவாறு அவர்களை வழிநடத்துங்கள். ஆனால் மாணவர்களின் நடவடிக்கைகள் எல்லைமீறிப் போனால் அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள். சட்டம் தன் வேலையைச் செய்யும் - என்றார்.

உலகில் எதனையும் கணனி மயப்படுத்தலாம் ஆனால் நீதியை கணனி மயப்படுத்த முடியாது. நீதியை நீதிவான்தான் வழங்க வேண்டும்.

அதாவது மனிதன்தான் வழங்க வேண்டும் என்றும் நீதிவான் விக்னராஜா அங்கு குறிப்பிட்டார்.

*ஒழுக்கத்துக்கு ஒரு பாடவேளை*

இளைப்பாறிய நீதிபதி மு.திருநாவுக்கரசு தமது உரையில் தெரிவித்ததாவது:-

இன்றைய மாணவர்களின் மனதைப் புரிந்துகொள்வது மிகவும் கடினமான விடயம். ஒரு பாடவேளையை ஒதுக்கி நல்லொழுக்கம் பற்றி அவர்களுக்குச் சொல்லி கொடுங்கள். நாங்கள் எல்லோரும் 'டி' பற்றித்தான் கதைக்கிறோம். ஆசிரியர்களும் அதைத்தான் எதிர்பார்க்கிறார்கள். ஒழுக்கம் பற்றியும் கதைக்க வேண்டும்.

மாணவர்களுக்கு ஒழுக்கம் பற்றி கூறுகின்ற காந்திமகான், இராஜகோபாலச்சாரி, சி.என்.அண்ணாத்துரை போன்றோரின் நூல்களை படிக்கச் செய்யலாம். இதன் மூலம் அவர்களின் மனதை மாற்ற முடியும். இன்றைய மாணவர்களுக்கு நேரம் காணாது. பாடசாலை, வீடு, ரியூசன் என்று ஓய்வின்றி ஓடித்திரிகிறார்கள் என்று தெரிவித்தார்.

*ஆசிரியர்கள் கண்காணிக்க வேண்டும்*

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை தனது உரையில் குறிப்பிட்டதாவது:-

மாணவர்களின் விடயத்தில் நாங்களே அதாவது கல்விச் சமூகமே பொறுப்பேற்க வேண்டும். பெற்றோர்கள் பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பி வைக்கும்போது அதிபர், ஆசிரியர்களை நம்பித்தான் அனுப்பி வைக்கிறார்கள். அவர்களின் நடவடிக்கைகளை ஆசிரியர்கள் கண்காணிக்க வேண்டும் எனத்தெரிவித்தார்.

இளைப்பாறிய கல்விமான் எஸ்.மகேஸ்வரன் தெரிவித்ததாவது:-

ஒரு மாணவன் ஒரு வகுப்பில் ஒரு தடவை மட்டுமே படிக்க வேண்டும். அதற்குப் பின்பு தன்னை விட வயது குறைந்த மாணவர்களுடன் சேர்ந்து படித்தால் அந்த மாணவர்களையும் கெடுத்துவிடுவான்.

கோழிக்குஞ்சுகளைப் பாருங்கள் ஒருகிழமைக் குஞ்சுகளையும் இரண்டுகிழமைக் குஞ்சுகளையும் ஒன்றாக வளர்த்தால் ஒருகிழமைக் குஞ்சுகளைக் கொத்து கொத்தென்று கொத்திப் பிளந்துவிடும் இரண்டு கிழமைக் குஞ்சுகள்.

இவ்வாறுதான் மாணவர்களும். இப்படியான மாணவர்களை வீட்டுக்கு அனுப்புவதுதான் நல்லது எனத் தெரிவித்தார்.

*அதிபர்கள் மீது குறை கூறுவது சரியல்ல*

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் ஏ.ஜே.பேணாட் தனதுரையில்:-

ஒரு மாணவன் பிழை விடுவதற்கு உரிய காரணங்களைக் கண்டறிய வேண்டும். பாசாலையில் கற்கின்ற மாணவன் பாடசாலைநேரம் தவிர்ந்த மிகுதி நேரத்தை வெளியில் செலவிடுகின்றான். இதனால் அவன் பிழைவிடுவதற்கான உட்காரணம், வெளிக்காரணம் இரண்டையும் பற்றி நாங்கள் ஆராய வேண்டும். அதை விடுத்து அதிபர்கள் மீது குறை சொல்லக்கூடாது எனத் தெரிவித்தார்.

யாழ்.இந்துக் கல்லூரியின் உப அதிபர் பொ.மகேஸ்வரன் தனது உரையில்:-

மாணவர்களை நல்வழிப்படுத்துவதற்காக நாங்கள் எவ்வளவோ வழிமுறைகளை கையாண்டு வருகிறோம். இவ்வாறு கையாளும் போது திருந்திய மாணவர்களும் திருத்த முடியாத மாணவர்களும் உண்டு. ஒரு மாணவனை திருத்த எண்ணி பதவிகள், பொறுப்புகள் கூடக் கொடுத்தது உண்டு. திருந்தாத மாணவனிடம் இருந்து பதவிகள், பொறுப்புக்களை மீளப் பெற்றதும் உண்டு.

சில மாணவர்கள் வெளிச் சம்பவங்களை பாடசாலைகளுக்குக் கொண்டு வந்து அதன் காரணமாக அடிதடியிலும் ஈடுபடுகிறார்கள். அவர்களுக்கு சமூகச் செல்வாக்கும் உண்டு. தமது ஊரவர்களை அழைத்து வந்து மற்றைய மாணவனைத் தாக்குகிறார்கள். இப்படிப் பல விதமான பிரச்சினைகளுக்கு நாங்கள் முகம்கொடுக்க வேண்டியுள்ளது எனத் தெரிவித்தார்.

மற்றும் இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராஜதுரை, சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் எஸ்.தனபாலன், பெரியபுலம் மகாவித்தியாலய அதிபர் செல்வி ஏ.கந்தையா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

(க-10-6)

# நல்லை ஆதீன முதல்வர் விரைவில் கனடா விஜயம்

## இந்துக்குருமார் குழுவும் கூடச் செல்லும்

யாழ்ப்பாணம்,ஜூன்5

கனடா நாட்டின் ஒன்ராறியோ - ரொறண்ரோ நகரில் உள்ள ஸ்ரீ துர்க்காதேவி அம்மன் ஆலயத்தில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்வதற்கென, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் தலைமையில், இந்து குருமார் அடங்கிய குழுவொன்று விரைவில் கனடா பயணமாகவுள்ளது.



கனடாவில் வாழும் இந்துமக்கள், கனடா ஸ்ரீ துர்க்காதேவி அம்மன் ஆலய நிர்வாகத்தினரின் அழைப்பை ஏற்று, இந்த விஜயம் மேற்கொள்ளப் படவுள்ளதாக நல்லை ஆதீன முதல்வர் "உதயனு"க்குத் தெரிவித்தார்.

சுமார் ஒரு மாத காலம் கனடாவில் தங்கியிருக்கும் இந்தக் குழுவினர், அங்குள்ள ஏனைய இந்து ஆலயங்களில் நடைபெறவுள்ள சமயக் கிரியைகள் மற்றும் சமய விழாக்களிலும் கலந்துகொள்வர் என்றும் -

பயண ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக இந்தக் குழுவினர் விரைவில் கொழும்பு பயணமாகவுள்ளனர் என்றும் நல்லை ஆதீன முதல்வர் மேலும் தெரிவித்தார்.

கும்பாபிஷேக நிகழ்வில் கலந்துகொள்வதற்கென கனடா செல்லவுள்ள இந்துக் குருமார் குழுவில், சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ வாகீஸ்வரக் குருக்கள், பிரம்மஸ்ரீ கணேசராஜ ஐயர் குகராஜசர்மா, பிரம்மஸ்ரீ சிவசாமி ஐயர் ஹரகுவர்த்தன சர்மா, பிரம்மஸ்ரீ சதாசிவஐயர் யோகேஸ்வர சர்மா, பிரம்மஸ்ரீ சோமசுந்தரஐயர் பாலச்சந்திர ஐயர், பிரம்மஸ்ரீ சதாசிவ ஐயர் ராதாகிருஷ்ண ஐயர், பிரம்மஸ்ரீ சிவகடாட்ச ஐயர் சண்முகரட்ண ஐயர் ஆகியோர் இடம் பெறுகின்றனர். (க-7)

## நாளை

வைகாசி 23
புதன்கிழமை
திதி: பூரணை
காலை 7.40 வரை
பின் பிரதமை
நட்சத்திரம்: கேட்டை
முன்னிரவு 11.43 வரை.
சுபநேரம் : 4.22 - 5.52
ராகுகாலம் : 11.52 - 1.22
(பழைய நேரப்படி)

## கண்பரிசோதனை முகாமுக்குப் பதிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்5

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையினால் எதிர்வரும் 10 ஆம் திகதி நடத்தப்படவுள்ள இலவச கண்பரிசோதனை முகாமுக்கான பதிவுகள் இன்றும் எதிர்வரும் வெள்ளியன்றும் மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## உதயவாக்கு

உயிர்களிடத்தில் தாம் கொண்டுள்ள இணக்கமே இறைவணக்கம் [illegible]


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



இத்தனை எச்சரிக்கையையும் மீறி தேங்காய்க்கும் ஓலைக்கும் ஆசைப்பட்டால் இவரைப் போன்றவர்களுக்கு வரும் ஆபத்துக்களை எவராலும் தடுக்க முடியாது! தங்கள் வாழ்வில் அக்கறை கொள்ளாதவர்களுக்கு யாரால் உதவமுடியும்....?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரசைக் கவிழ்க்கும் ஐ.தே.க வின் முயற்சிக்கு எதிராக

# தொழிற்சங்கங்களின் போராட்டம்

# நாடளாவிய ரீதியில் நடத்தப்படும்

## அமைச்சர் அலவி அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 5
அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கென ஐ.தே.கட்சி எடுத்து வரும் சகல முயற்சிகளையும தடுக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டம் நடத்தப்படும்.

— இவ்வாறு தெரிவித்துள்ளார் தொழில் அமைச்சர் அலவி மௌலானா.

அரசுக்கு எதிராக ஐ.தே. கட்சி கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து கொழும்புச் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அமைச்சர் அலவி மௌலானா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் இது குறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நாட்டில் யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய அவசியம் இன்று சகலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. யுத்தம் நிறுத்தப்பட்டு இனப்பிரச்சினை தீர்ந்தால் அபிவிருத்தி முயற்சிகளுக்கு போதியளவு பணம் மீதமாகும். இதனால் பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்து வேலை வாய்ப்புகளும் பெருகும். பாவனைப் பொருள்களின் விலைகளையும் குறைக்கலாம்.

நாட்டில் பாரிய பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை விடுத்து அரசாங்கத்தைக் குழப்பும் நடவடிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுள்ளது. அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி முயல்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இத்தகைய நடவடிக்கைகள் சுயநல அரசியலைக் கடைப்பிடிப்பதையே வெளிப்படுத்துகின்றது. நாட்டின் பொது நலத்தில் ஐ.தே.கவுக்கு அக்கறையிருப்பதாகத் தெரியவில்லை.

ஐ.தே.க.வின் இந்த சுயநல அரசியலைக் கண்டித்து பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பிலான தொழிற்சங்க சம்மேளனம் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

நாடாளுமன்றத்தில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பிக்கும் நாளன்று அரசசார்பு தொழிற்சங்க சம்மேளனம் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தும் என்று அமைச்சர் தெரிவித்தார். (க-7)

## நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலிகள்

எமது அருமை நண்பன்
அ. அரிகரன்
அவர்களது தந்தையார்

### Dr. த. அருமைத்துரை

அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆறாத் துயர் கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடிசார் பொறியியல்
முதலாம் வருட மாணவர்கள்,
யாழ். தொழில்நுட்பக்கல்லூரி.

(88663)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### செல்வி பரமேஸ்வரி கதிரேசு

[ஓய்வு பெற்ற ஆசிரியை]

மலர்வு 22-07-1935 — உதிர்வு 06-05-2001

அன்னார் யாழ். போதனா வைத்தியசாலையில் நோயுற்று இருந்த வேளையில் சிகிச்சை அளித்த 24 ஆம் வார்ட் வைத்திய அதிகாரிகள், தாதிமார்கள், ஊழியர்களுக்கும், மரணத்தின் பின்பு வீட்டுக்குஅவரது உடலைக் கொண்டுவருவதற்கு உதவிபுரிந்தவர்களுக்கும், அன்னாரது இறுதிக்கிரியையின் போது உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், சுற்றத்தார், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (05—06—2001) செவ்வாய்க்கிழமை அன்னாரது வீட்டில் நடைபெறும் ஆத்ம சாந்திக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சகோதரி:- மகேஸ்வரி,
பெறாமகள்:- சாந்தா.

டிஸ்பென்சறி ஒழுங்கை,
உரும்பிராய்.

[38647]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### குமாரசாமி கந்தவனம்

(நெல்லியடியின் முதல் வியாபார ஸ்தாபகர்; பிரபல வர்த்தகர்)

திதி: 05 - 06 - 2001

முல்லையில் மணமென தன்னிலை நாட்டி
முந்துறும் இறையன்பை எமக்கு ஊட்டி
எல்லையில் அன்பின் மகத்துவம் காட்டி
எல்லவரும் போற்றுமிறை யறிவைத் தீட்டி
தில்லையன் விரதத்தால் உடலை வாட்டி
தீர்த்த நாளில் அவன்பதம் தேடி
வல்லையில் பற்றினன், இருந்தும் நாட்காட்டி
வந்தது மூன்றாண்டென நாள்களை ஓட்டி!

- குடும்பத்தினர்.

விண்மீன் அங்காடி
''குமாரசாமி கந்தவனம் பில்டிங்''
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.

(88589)

## நாளை காங்கேசன் செல்கிறார்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி என். ஜீவேஸ்வரா நாளை புதன்கிழமை காங்கேசன்துறைக் கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் கடிதங்களையும் அவர் எடுத்துச்சென்று கையளிப்பார். (க-10)

## யாழ். தபாலகத்தில் வியாழன் முதல் ஒளிநாடா ஏற்பு

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்கு அனுப்பி வைக்கும் வீடியோ நாடாக்களை படையினரின் சோதனைக்காக யாழ். பிரதம தபாலகத்தில் ஏற்கும் பணி மீண்டும் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக பிரதம தபாலதிபர் சி. மார்க்கண்டன் அறிவித்துள்ளார்.

படையினரின் சோதனைகளின் பின்பு அவை உரிய [illegible] படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-10)

# மாகாணவிளையாட்டுப்போட்டி; திருமலையில் 19 இல் ஆரம்பம்

## யாழ். மாணவர்களும் செல்கின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 5
வடக்கு—கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான மாகாண மட்ட விளையாட்டுப்போட்டிகள், எதிர்வரும் 19 ஆம் திகதி திருகோணமலையில் ஆரம்பமாகவுள்ளன.

பெருவிளையாட்டுகள் (குழுப்போட்டிகள்) மற்றும் மெய்வன்மைப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கென யாழ். மாவட்டத்தில் இருந்தும் மாணவர்கள் அங்கு செல்லவுள்ளனர்.

எதிர்வரும் 19 ஆம், 20 ஆம், 21 ஆம், 22 ஆம், 23 ஆம் திகதிகளில் பெரு விளையாட்டுக்களும் —

26 ஆம், 29 ஆம், 30 ஆம் திகதிகளில் மெய்வன்மைப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

★ 19 ஆம் திகதி—கரபந்தாட்டம் (பெண்கள்) 15, 17, 19 வயதுப் பிரிவுகள்.

காற்பந்தாட்டம்—17, 19 வயதுப் பிரிவுகள் கிரிக்கெட்—19 வயதுப் பிரிவு.

★ 20 ஆம் திகதி — கரபந்தாட்டம் (பெண்கள்) 15, 17, 19 வயதுப் பிரிவுகள்.

காற்பந்தாட்டம்—17, 19 வயதுப் பிரிவுகள்.

கிரிக்கெட்—19 வயதுப் பிரிவு.

★ 21ஆம் திகதி — வலைப்பந்தாட்டம் — 15, 17, 19 வயதுப் பிரிவுகள்.

கரபந்தாட்டம் (ஆண்கள்) —15, 17, 19 வயதுப் பிரிவுகள்

எல்லே (ஆண்கள்) —19 வயதுப் பிரிவு.

★ 22 ஆம்திகதி — வலைப்பந்தாட்டம் — 15, 17, 19 வயதுப் பிரிவுகள்.

கரபந்தாட்டம் (ஆண்கள்) — 15, 17, 19 வயதுப் பிரிவுகள்.

எல்லே (ஆண், பெண்)— 19 வயதுப் பிரிவு.

★ 23 ஆம் திகதி — எல்லே (பெண்கள்)—19 வயதுப் பிரிவு.

வலைப்பந்தாட்டம் —17 வயதுப் பிரிவு இறுதியாட்டம்.

காற்பந்தாட்டம் 19 வயதுப்பிரிவு இறுதியாட்டம். (க-10)

### வல்வை மாவட்ட வைத்தியசாலையின்

# இலவசக் கண்ணாடி வழங்கும் கொடைப் பணிக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், ஜூன் 5
வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்படும் இலவசக் கண்ணாடி வழங்கும் பணிக்கென ரூபா 20 ஆயிரம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

மயிலியதனையைச் சேர்ந்த சின்னத்துரை சிவலிங்கம் என்பவரே இந்த அன்பளிப்பை வழங்கியுள்ளார்.

இதேவேளை—
மயிலியதனையைச் சேர்ந்த திருமதி சி. பூமணி, சின்னத்துரை சிவலிங்கம் ஆகியோரின் குடும்பததினர் இதற்கு முன்னரும் மேற்படி வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு ரூபா 25 ஆயிரத்தை வழங்கியிருந்தனர் என மாவட்ட வைத்திய அதிகாரி க. மயிலேறும்பெருமாள் அறிவித்துள்ளார். (க-7)

# பேராசிரியர் சண்முகதாஸின் மணிவிழாச் சிறப்பு ஆய்வுநூல்

## இன்று கைலாசபதி அரங்கில் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 5
யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையினர் நடத்தும் பேராசிரியர் அ. சண்முகதாஸ் மணிவிழாச் சிறப்பு ஆய்வுநூல் வெளியீடு இன்று காலை 8.30 மணிக்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் எஸ். சிவலிங்கராசாவும், அருளாசியுரையை சிவாகம கலாநிதி நா. சர்வேஸ்வரக் குருக்களும், வாழ்த்துரைகளை பேராசிரியர் இ. குமாரவடிவேலு, பேராசிரியர் செ. பாலச்சந்திரன், பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர், கலாநிதி நா. சண்முகலிங்கன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

ஆய்வுநூலுக்கான வெளியீட்டுரையை பேராசிரியர் செ. சிவஞானசுந்தரமும் (நந்தி), நயப்புரைகளை பேராசிரியர் சி. க. சிற்றம்பலம், பேராசிரியர் கா. குகபாலன், முதுநிலை விரிவுரையாளர் ம. இரகுநாதன், விரிவுரையாளர் க. அருந்தாகரன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியல் கழகத்தின் 'காத்தவராயன் கூத்தும்' நடைபெறவுள்ளது. (க–10)

## இன்றறக்ட் கழக உறுப்பினர்களுக்கு அழைப்பு

யாழ். றோட்டறிக் கழகத்தின் வைரவிழாவின் நிறைவையொட்டி இன்று காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் சகல இன்றறக்ட் கழக அங்கத்தவர்களையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தலைவர் தெரிவித்துள்ளார். [க-10]

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர்
திரு. வல்லிபுரநாதர்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இராசம்மா கனகசபை

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக்கல்லூரி, புத்தூர்.

(88690)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் அ.சண்முகதாஸ்
# மணிவிழா நிறைவு ஆய்வு நூல்
# வெளியீட்டு விழாச் சிறப்பு மலர்

## பல்லாண்டு வாழ்க

உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பேராசிரியர் அவர்களுடன் எனக்கு ஏற்பட்ட அறிமுகமும் நட்பும் ஏறக்குறைய நான்கு தசாப்தங்களைக் கொண்டன. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் அவர்கள் மாணவனாக விளங்கிய காலத்தில் தமிழ் மன்றச் செயற்பாடுகளில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்ட ஒருவராவார். பேச்சு, நாடகம், விவாதம் எனப் பல துறைகளிலும் தனது முத்திரையைப் பதித்தவர். அங்கு தமிழ்த்துறை விரிவுரையாளராகப் பணியாற்றிய பின் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் விரிவுரையாளராகவும், கலைப்பீடாதிபதியாகவும், பணியாற்றி, இன்று உயர்பட்டப் படிப்புப் பீடாதிபதியாக கடமையாற்றி வருகிறார்.

சிறந்த பேச்சாளராகவும், விரிவுரையாளராகவும், ஆய்வாளராகவும் விளங்கும் பேராசிரியர் அவர்கள் தேசிய ரீதியில் மட்டுமன்றி, சர்வதேச ரீதியிலும் பல மாநாடுகளில் ஆய்வாளராகப் பங்குபற்றியுள்ளார். தமிழ், சமயம் சார்ந்த துறைகளில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து எமது மொழி, சமயத்தின் பெருமைகளை நிலைநாட்டியுள்ளார்.

பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் தமிழ்ப்பணி, சமயப் பணியுடன் சமூகப் பணியிலும் நிறைவு காண்கிறார். திருநெல்வேலியில் அவர் நடத்திவரும் 'சைவச் சிறுவர் இல்லம்' அவரின் சமூகப் பணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அன்பும், பண்பும், இனிய சுபாவமும் உடையவரும், மொழிப் பற்றும், சமயப் பற்றும் மிக்கவருமான மணிவிழாக் காணும் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் நூற்றாண்டு விழாக் காணவேண்டும். அவரின் சேவை எம் மக்களுக்குக் கிட்ட வேண்டும். அவரும் அவர் குடும்பமும் சிறப்புடன் வாழ வேண்டும் என அவர்களை மனப்பூர்வமாக வாழ்த்தி, அவர் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வேண்டுகின்றேன்.

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
*துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்.*

## நண்பர் பேராசிரியர் சண்முகதாஸ்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர், பீடாதிபதிகளில் ஒருவர். அவர் ஒரு தலைசிறந்த பேச்சாளர். அவரின் குரல் இனிமையான குரல்; மணியோசை போன்று ஒலிக்கும் குரல். அதனால் அவரின் போதனைகள் கவர்ச்சி மிக்கவை.

பன்மொழி அறிவு கொண்டவர். வித்தியாபீடங்களிலே பல உயர் பட்டங்களைப் பெற்ற தகைமையுடையவர். பல பயனுடைய நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியவர். வித்துவப் புலமை மிக்கவர். சமுதாயத்தோடு தனது குடும்ப வாழ்க்கையை ஒன்றிணைத்துக் கொண்டவர். அன்னாருடைய சாதனைகளுக்கும் ஏற்றத்திற்கும் மனோன்மணி அம்மையார் பக்கபலமாக இருக்கின்றார்.

அவர்களிருவரும் மேலும் நலம் பெற வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**பேராசிரியர் சி.பத்மநாதன்.**
*வரலாற்றுத் துறை,*
*பேராதனைப் பல்கலைக்கழகம்.*

## A.SANMUGADAS

Prof.A.Sanmugadas who is known to me closely from 1998 since the All India Conference of Dravidian Linguists at Chennai is primarily a Scholar on Tamil and Linguistics and a good friend who holds up nothing in his heart when a friend is intimate.

Sanmugadas inspite of his heavy administrative duties has contributed to Tamilology substantiately. His desire for focussing attention of the main land Scholars on Sri Lankan Tamils contribution to Tamil is infectious.

Happily married to Manonmani Sanmugadas who is also a Tamil researcher, Sanmugadas is an asset to the University of Jaffna.

**V.I.SUBRAMONIAM** *M.A.Ph.D.(Ind.USA),*
*Hon.D.Litt(Jaffna, Sri Lanka),*
**(Former Vice-Chancellor, Tamil University).**



## சிவத்தம்பியின் மடல்

அன்புள்ள சண்,

இப்பொழுது போல இருக்கிறது 1959-60 களில் "கர்ணன் போர்" தயாரிப்பின் பொழுது நீங்கள் அதில் கிருஷ்ணனாக நடித்ததும், குரல் விட்டு அழகாகப் பாடியதும், அப்பொழுதிலிருந்தே உங்கள் மீது நிறைந்த அபிமானமும் நட்பும்.

பின்னர் நீங்கள் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு போனதும் அதன் பின் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு வந்ததும், தமிழ்த்துறைத தலைவரானதும் எல்லாமே எனக்கு நன்கு நினைவிருக்கிறது.

மொழியியலில் உங்களுக்கு விசேட பயிற்சி உண்டு. ஆனால் நீங்கள் அதனை நாட்டார் வழக்கியல் தளத்தில் நின்றும் பார்க்கின்றீர்கள் என்றும் எனக்குத் தெரியும்.

மொழியியலில் மாத்திரமல்லாமல் யாப்பியலில் மற்றும் தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றில் நீங்கள் எழுதியவை மிக முக்கியமானவைகளும் தாங்களும் தங்கள் மனைவியரும் யாழ்ப்பாணத்தில் முக்கியமான இரண்டு தலங்கள் பற்றி எழுதியுள்ள நூல்கள் உங்களுக்கு அழியாப் புகழ் தரும். யாழ்ப்பாணம் முதல் அமெரிக்காவரை பல அறிஞர்கள் உறவும் தொடர்பும் உங்களுக்கு உண்டு. இவையாவும் நமக்குப் பெருமை தருவன. இவற்றுக்கு சிகரம் வைத்தாற் போல இப்பொழுது நீங்கள் உயர் படிப்புத் துறையின் பீடாதிபதியாகவும் இருக்கின்றீர்கள். உங்கள் புகழ் மேலும் சிறக்க என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள். நீங்கள் உங்கள் மனைவியார், உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளும் சிறப்புற்று வாழ வாழ்த்துவதுடன் தமிழுக்கு உங்கள் சேவையைத் தொடர்ந்து எதிர்பார்க்கிறேன்.

*இங்ஙனம்*
*அன்பன்,*
**கார்த்திகேசு சிவத்தம்பி.**

## பழகுவதற்கு இனிமையானவர்

பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் அறுபதாவது அகவை நினைவு கூரும் பொருட்டு ஒரு மலர் வெளியிடப்படுவதை அறிந்து மகிழ்கின்றேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உயர்பட்ட ஆய்வுப் பீடாதிபதியாகப் பணிபுரியும் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் மொழியியல், தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் மற்றும் சமயம், பண்பாடு தொடர்பாக மிகவும் ஆழமான ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளார். இவரது ஆய்வுக் கட்டுரைகள் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் ஜப்பானிலும் வெளிவரும் ஆய்வேடுகளில் வெளிவந்துள்ளன.

சர்வதேசக் கருத்தரங்குகள் பலவற்றில் பங்குகொண்ட பேராசிரியர் அவர்கள் 1997இல் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ஆறாவது உலக சைவ மாநாட்டிலும், 2000 இல் இந்தோனேசியாவின் பாலித்தீவில் நடைபெற்ற இரண்டாவது உலக இராமாயண, பாரதக் கருத்தரங்கிலும் சிறப்பாக ஆய்வுக் கட்டுரை படித்த பெருமைக்குரியவர்.

பழகுவதற்கு மிகவும் இனியவராக விளங்கும் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களை நீடூழி வாழ்க என வாழ்த்தி அவர்கள் மேன்மேலும் பணிகள் பல புரிவதற்கு இறையருள் கிடைக்க வேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

**க.பாஸ்கரன்,**
*இயக்குநர்,*
*தத்துவ மையம், தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

## MESSAGE

I am glad to know that the Department of Tamil, University of Jaffna, Sri Lanka, is celebrating the 61st Birthday of Prof.Dr.A.Sanmugadas, Senior Professor of Tamil on 5.6.2001 and a Volume is brought out to honour Dr.A.Shanmugadas.

I wish the function a grand success and also extend my warm greetings to the organisers and participants.

**Dr.Pon.Kothandaraman**
*Vice-Chancellor,*
**UNIVERSITY OF MADRAS.**

## இங்கிதமாகப் பழகும் 'சண்'

பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் மணிவிழாச் சிறப்பு நூலொன்று வெளியிடப்படும் இத்தருணத்தில், அவருக்கு என் மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதிற் பேருவகை எய்துகிறேன். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் உற்சாகமிக்க ஒரு மாணவனாக இருந்த காலமுதல் அவருடைய நட்பினை நான் அனுபவித்து வருகிறேன். அவரது எளிமையும் இங்கிதமாகப் பழகும் இயல்பும் கண்ணியமும் என்னை மிகவும் கவர்ந்தவை.

தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று முதல் வகுப்பில் சித்தியெய்தி, பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சிறிது காலம் விரிவுரையாளராகப் பணியாற்றிய சண், எடின்பரோ பல்கலைக்கழகத்திற் கலாநிதிப் பட்டம் பெற்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் விளங்கி இன்று பட்டப்படிப்புக்கள் பீடாதிபதியாக உயர்ந்திருப்பது எனக்குப் பெருமை கலந்த மகிழ்வினை ஊட்டுவதாகும்.

மொழியியல், நாட்டாரியல், இலக்கியம் முதலான துறைகளில் அவர் மேற்கொண்ட ஆய்வுகளும் அவரது பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் விதந்து குறிப்பிடத்தக்கவை. பல நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் மட்டுமன்றிச் சில கவிதைகள் சிறுகதைகளையும் அவர் எழுதியுள்ளார். எடுப்பான குரலில் அவர் பாடுவதைக் கேட்பது இன்பம் பயப்பதாகும். நடிப்புத் துறையில் அவருக்கு ஈடுபாடு உண்டு. எமது பரஸ்பர அன்புக்குரிய பேராசிரியர் சு.வித்தியானந்தன் தயாரித்த 'கர்ணன் போர்' நாடகத்தில் கிருஷ்ணனாகச் சண் தோன்றிய கோலம் இன்னும் என் நினைவினின்றும் நீங்கவில்லை.

ஒரு நல்லாசிரியராக விளங்கி ஏராளமான மாணவர்களின் அன்பினையும் மதிப்பினையும் சண் பெற்றிருக்கின்றார். ஏனையவர்களிடத்து ஆர்வமிக்கவரான அவர் பிறருக்கு உதவுவதிலும் உற்சாகமூட்டுவதிலும் இன்பம் காண்பவராவார். வாழ்க்கையில் கஷ்ட நஷ்டங்களை இளமையிலே அனுபவித்த சண் மிகுந்த மனிதாபிமானத்துடன் பல சமூக சேவைகளிலும் சமயப்பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

நல்ல மனங்கொண்டவரான நண்பர் சண், தன் 'காரியம் யாவினுங் கைகொடுக்கும்' துணைவியாரோடும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்களோடும் நெடுங்காலம் மகிழ்ந்து குலவியிருந்து தன் நற்பணிகளைத் தொடர வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

*நிறைந்த அன்புடனும் பசுமையான நினைவுகளுடனும்*

**பேராசிரியர் சி.தில்லைநாதன**
*தலைவர்,*
*தமிழ்த்துறை,*
*பேராதனைப் பல்கலைக்கழகம்*

## தமிழ்த்துறைத் தலைவரின் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் மூத்த தமிழ்ப் பேராசிரியராக விளங்கும் பேராசிரியர் கலாநிதி அருணாசலம் சண்முகதாஸ் அவர்கள், பேராசிரியர்கள், சுவாமி விபுலானந்தர், க.கணபதிப்பிள்ளை, வி.செல்வநாயகம், சு.வித்தியானந்தன், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோரின் மரபிலே வாழையடி வாழையாக வந்தவர்.

இலக்கியம், இலக்கணம், மொழியியல், நாட்டார் வழக்காற்றியல் பண்பாடு, சமயம் முதலான துறைகளிலே புலமையும் ஈடுபாடும் கொண்ட பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் எழுதிய கட்டுரைகளிற் சிலவற்றைத் தெரிவு செய்து அகவை ஒன்றுக்கு, ஒன்று என்ற அடிப்படையில் அறுபது கட்டுரைகளைத் தொகுத்து இன்று வெளியிடுகின்றோம்.

இவர் ஆங்கிலத்திலும் தமிழிலுமாக இருநூற்றைம்பது கட்டுரைகளுக்கு மேல் எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எமக்கு வழிகாட்டியாகத் திகழும் நல்லாசான் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் அகவை அறுபது நிறைவைத் தமிழ்த்துறை இந்த ஆய்வுநூல் வெளியீட்டு விழாவோடு மனநிறைவாகக் கொண்டாடுகின்றது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும் அவரது அன்புப் பாரியார் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் எல்லா நலனும் பெற்று வாழப் பல்கலைக்கழகத்தில் எழுந்தருளியிருந்து திருவருள் பாலிக்கும் பார்வதிசமேத பரமேஸ்வரனின் பாதங்களைப் பணிகின்றோம்.

**கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா**
*தலைவர்,*
*தமிழ்த்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

## தமிழ் மொழியை அலங்கரிக்கும் குருநாதன்

எமது ஆசான் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் சர்வதேசப் புகழ் பெற்றவர். தமிழ் மொழியை, அதன் பண்பாட்டினை உலக அரங்கிற்கு எடுத்துச் செல்பவர். தமிழ், ஆங்கிலம், மலையாளம், சமஸ்கிருதம், ஜப்பானிய மொழி முதலான பல மொழிகளிலே தேர்ச்சிபெற்றவர். பன்மொழிப்புலமை அவரது அறிவின் ஆழத்திற்குக் காரணம் எனலாம். பேராசிரியர்களான க.கணபதிப்பிள்ளை, வி.செல்வநாயகம், சு.வித்தியானந்தன், ஆ.சதாசிவம், ஆ.வேலுப்பிள்ளை அஷ்ர் போன்றவர்களின் தலைசிறந்த மாணவன். அவர்களின் பாதையில் அவர்கள் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து தமிழ் மொழியை, தமிழ்த்துறையை அலங்கரிக்கும் நல்ல குருநாதனாக விளங்குகிறார். பேராசிரியர் அவர்கள் இலக்கணம், இலக்கியம், மொழியியல், நாட்டாரியல், பண்பாடு எனப் பல துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர். சிறந்த ஆய்வாளன், நல்ல குருநாதன், சிறந்த பேச்சாளர், சிறந்த நிர்வாகி என சிறந்த பண்புகளைப் பெற்றவர். அறிவிற்கு ஏற்ப பணிவு உள்ளம் கொண்டவர். எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் தன்மை பெற்றவர். வறுமை, துயரம் உற்ற பிள்ளைகள் பேராசிரியரை நாடிச் சென்றால் அவர்களின் துயரத்தினைத் தனது துயரமாக ஏற்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார். துயரம் அடைந்த பிள்ளைகளின் துன்பத்தினைச் சொல்லுகின்ற பொழுது அவரது உள்ளம் கண்ணீரில் மிதக்கும். அந்தக் கருணை உள்ளம்தான் பேராசிரியரை உயர்ந்த மனிதன் ஆக்கியது. சேர் பொன்.இராமநாதன், 'இந்துபோட்' இராஜரட்ணம் போன்றவர்கள் வழி நடத்திய நிறைவாழ்வு சிறுவர் இல்லத்தை அன்று அவர்கள் காட்டிய பாதையில் அவரும் அவரது துணைவியாரும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பேராசிரியரும் அவரது குடும்பமும் நிறைவுடன் வாழ நல்லாசிகளை இறைவன் கொடுக்கவேண்டும்.

**செல்வி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்,**
*மலர் தொகுப்பாளர், விரிவுரையாளர், தமிழ்த்துறை - யாழ்.பல்கலைக்கழகம்.*

(சி16979)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு - யாழ்.அலுவலகம்

## பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆள்சேர்ப்பு

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களில் பகல், இரவு நேரங்களில் காவற் கடமை புரிவதற்குத் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

**குறைந்த பட்ச கல்வித் தகைமை:** க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**உயரம்:** 5 அடி 6 அங்குலம்

**வயதெல்லை:** 18-40

**விளையாட்டுத்துறையில் திறமை உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.** சுய விவரங்களைக் கொண்ட விண்ணப்பங்களை, 'மனிதவள அபிவிருத்திப் பிரிவு, வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின தமிழ் விவகாரங்கள் அமைச்சு - யாழ். அலுவலகம், 250/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பிவைக்கவும். தபாலின் இடது பக்க மேல் மூலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆள்சேர்ப்பு எனக் குறிப்பிடவும்.

***விண்ணப்ப முடிவு திகதி: 15. 06. 2001***

மனிதவள அபிவிருத்திப் பிரிவு,
வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு
மற்றும் வடக்கு – கிழக்கின் தமிழ்
விவகாரங்கள் அமைச்சு, யாழ்.அலுவலகம்,
*250/1, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(88671)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 02 - 05 - 1959

விண்ணில் 17 - 05 - 2000

அமரர்
**சுப்பிரமணியம் தட்சணாமூர்த்தி**
*(கைதடி - கமநலசேவைநிலைய விற்பனை லிகிதர்)*

ஆண்டொன்று சென்றதையா அவனியிலே எம்
குடும்பத்தின் குலவிளக்கு அணைந்து!
தங்கத்திலே குறையிருக்கும்; ஆனால் உங்களது
நெஞ்சத்திலே எப்போதும் நிறைவேயிருக்கும்!
பண்பிலே தெய்வமாய் பாசத்தின் திருவுருவாய் வாழ்ந்த
எங்கள் குடும்பத்தின் தீபமே!
முடிசார்ந்த மன்னரும் முடிவில் பிடிசாம்பராவர்;
உங்கள் வாழ்வில் பொறாமை கொண்ட பொல்லாத காலன்
உங்களை அழைக்க "ஷெல்" உருவெடுத்து வந்தானோ?
பெற்றவர்கள் கடன்தீர்த்த பெருமகனானீர்!
பெரும் பேறடைந்திடுவீர் நீர் என்றென்றும்
பெருமான் பாதத்தில் நிலைபெற இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*கைதடி தெற்கு,*
*கைதடி.*

மனைவி - திருமதி த.சந்திரமதி,
மைத்துனர்.

(88574)



# கண்ணீர் அஞ்சலி

We Serve

மானிப்பாய் மத்திய மருந்தகம்
**லயன் Dr.தம்பிஐயா அருமைத்துரை**
எமது கழகத்தின் மூத்த உறுப்பினரும் தற்போதைய
இரண்டாவது உதவித் தலைவருமான
**Dr.T.அருமைத்துரை**

அவர்களின் திடீர் மறைவையொட்டி துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உறுப்பினர்கள்,
***மானிப்பாய் கோயிற்பற்று லயன்ஸ் கழகம்.***

(88662)


## அராலி இந்து கட்டட அடிக்கல் நடும் வைபவம்

சங்கானை,ஜூன்5

அராலி இந்துக் கல்லூரியில் புதிய இருமாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும்விழா புதன்கிழமை காலை 10.30 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ்.மகாதேவன் தலைமையில் இடம்பெறும். (க-29)

## புகைத்தலுக்கு எதிராகப் பிரசுரம்

சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு 'புகைப்பதால் ஏற்படும் தீமைகள்' என்ற தலையங்கத்தில் பிரசுரம் ஒன்றை மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் வெளியிட்டுள்ளனர்.

மானிப்பாய் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் இந்தப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

(க-135)

## முழுநிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு டாக்டர் வி.யோகேஸ்வரன் தலைமையில் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'நாமும் தமது சூழலும்' எனும் தலைப்பில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சி.குகதாசன் கருத்துரையாற்றவுள்ளார். (க-10)

## இளவாலையில் இன்று இலவச கண் பரிசோதனை

யாழ்ப்பாணம்,ஜூன்5

இளவாலைப் பங்குத் தந்தையின் அனுசரணையுடன் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச கண்பரிசோதனை முகாம் இன்று காலை 8 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த முகாமில் யாழ்.போதனா வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை நிபுணர் க.குகதாசன் கண் பரிசோதனைகளை மேற்கொள்வார். (க-10)

# பண்டத்தரிப்பில் ஒன்றுகூடல்

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் மதியபோசன விருந்தும் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் கல்லூரி அதிபர் செல்வி பொ.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும், சிறப்பு விருந்தினராக மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி விஜயராணி பசுபதிப்பிள்ளையும் கலந்து கொள்வர். (க-135)


# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

(05-06-2001)

HAPPY



BIRTHDAY

செல்வன் கதீசன்

சுன்னாகத்தைச் சேர்ந்த
திரு.திருமதி உதயகுமாரன் - கலைவாணி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
**செல்வன் கதீசன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (05-06-2001) செவ்வாய்க்கிழமை தனதில்லத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

கதீசனை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, ரவி மாமா குடும்பம் (ஜேர்மனி), விக்கி மாமா குடும்பம் (லண்டன்), தாசன் மாமா (இந்தியா) மற்றும் மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார் மற்றும் உறவினர்களும் விநாயகப் பெருமானின் அருள் பெற்று ஆரோக்கியத்தோடு சிறப்புற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

*Dr.சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*

T.உதயகுமாரன்
*(அன்பு அப்பா)*

(88672)



உ
ஓம்சக்தி



ஊர்காவற்றுறை-புளியங்கூடல்-செருத்தனைப்பதி
## ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்
வருடாந்த
## மஹோற்சவ விஞ்ஞாபனம் ~ 2001

**கொடியேற்றம் :-** **வைகாசிமாதம் 25 ஆம் நாள் (08-06-2001)** வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணி
**தேர்த்திருவிழா:-** **ஆனி மாதம் 2 ஆம் நாள் (16-06-2001)** சனிக்கிழமை காலை 8.30 மணி
**தீர்த்தோற்சவம்:-** **ஆனி மாதம் 3 ஆம் நாள் (17-06-2001)** ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி

குறிப்பு: சித்தி விநாயகர், கதிர்வேலவர், வசந்த மண்டப மகா கும்பாபிஷேகம் 07-06-2001 வியாழக்கிழமை காலை 6.31 மணி முதல் 8.04 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.

செருத்தனைப்பதி, புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

**- ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்.**

(88664)



உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!
ஸ்ரீ காமாக்ஷி அம்பிகை துணை

# திருமண அழைப்பு

**அன்புடையீர்!**
நிகழும் மங்களகரமான விஷூ வருஷம் வைகாசி மீ 24 ஆம் நாள் (07-06-2001) வியாழக்கிழமை முற்பகல் 10.40 மணி முதல் 12.16 மணிவரைக்குள் வரும் சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில்,

எமது புத்திரன்
திருநிறை மங்களச்செல்வன்
**திருமாறன் (பிரபு)**
அவர்களுக்கு



எமது புத்திரி
திருநிறை மங்களச்செல்வி
**கங்கா**
அவர்களை

யாழ்.வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய மண்டபத்தில் திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், அனைவரும் குடும்ப சகிதம் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

* **எல்லோருக்கும் தனியான அழைப்பு வழங்கமுடியவில்லை. இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

தங்கள் நல்வரவை நாடும்:

**திரு.திருமதி க.செல்லத்துரை**
**குடும்பத்தினர்**
கே.கே.எஸ்.வீதி,
25/8, அரசடி ஒழுங்கை.
யாழ்ப்பாணம்.

**திரு.திருமதி க.சாந்தகுமாரன்**
*(தீயணைப்புச் சேவை, யாழ்.மாநகரசபை)*

**திரு.இ.வே.கந்தசாமிப்பத்தர்** (பேரன்)
555/3,கே.கே.எஸ்.வீதி,
மதவடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(88669)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகிச்சை பெற்றுவந்த இளவரசர் நேற்று அதிகாலை மரணம்!



காத்மண்டு,ஜூன்5

கடந்த வெள்ளிக்கிழமை நேபாள மன்னர் பிரேந்திரா மற்றும் அவரது குடும்பத்தினரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாகக் கூறப்படும் இளவரசர் திபேந்திரா நேற்று அதிகாலை அவர் சிகிச்சை பெற்று வந்த ஆஸ்பத்திரியில் மரணமானார்.

தனது தந்தையான மன்னரையும, தாய் மற்றும் குடும்ப உறுப்பினர்களை சுட்டுக் கொன்றுவிட்டு தன்னைத் தானே சுட்டுக் கொண்டதாகக் கூறி இளவரசர் திபேந்திரா சூட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

மிக மோசமான நிலையில் இருந்த அவரது உடல் நிலையைச் சீர்ப்படுத்த மருத்துவர்கள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் சிகிச்சைகள் எவையும் பயனளிக்காமல் நேற்று அதிகாலை அவர் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இளவரசர் திபேந்திரா தன்னைத் தானே சுட்டுக் கொண்டதாக முதலில வந்த செய்திகள் தெரிவித்தன. ஆனால் அவரது முதுகில் சூட்டுக்காயங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் இளவரசரது மரணம் தொடர்பாக சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. (ம)




**இந்தியாவின் குஜராத் மாநிலம் கடந்த ஆண்டு பெரும் பூகம்பத்தால் தாக்கப்பட்டு மிக மோசமான பாதிப்புக்களை சந்தித்தது. இதுவரை அந்த மாநிலம் பூகம்ப பாதிப்புக்களிலிருந்து முழுமையாக மீண்டு வரவில்லை.**

**பூகம்பத்தால் கடந்த ஆண்டு இடிந்து சிதைந்துபோன தனது வீட்டு இடிபாடுகளுக்கு மத்தியில் சிறுமி ஒருத்தி அமர்ந்திருப்பதையும், ஒருவருடத்துக்கு மேலாகியும் பாதிக்கப்பட்ட பிரதேசம் புனரமைப்புச் செய்யப்படாமல் சிதைந்து கிடப்பதையும் படங்களில் காணலாம்.**

## புதிய மன்னர் முடிசூடியதை அடுத்து

# நேபாள நகரங்களில் வன்முறைகள்; காத்மண்டுவில் இராணுவம் குவிப்பு!

## பிரதமர் கொய்ராலாவுக்கு எதிராகவும் போர்க்கொடி



புதிய மன்னர் ஜியானேந்திரா

காத்மண்டு,ஜூன்5

**நேபாளத்தின் புதிய மன்னராக ஜியானேந்திரா நேற்று முடி சூடிக்கொண்டதை அடுத்து தலைநகர் காத்மண்டு உட்பட பல இடங்களில் வன்முறைகள் வெடித்துள்ளன.**

**ஆர்ப்பாட்டக்காரர்கள் மன்னர் ஜியானேந்திராவுக்கும் பிரதமர் கிரிஜாபிரசாத் கொய்ராலாவுக்கும் எதிராகக் கோஷங்களை எழுப்பினர். வன்முறைகள் வெடித்துள்ளதை அடுத்து மன்னரது அரண்மனையைச் சுற்றியும் தலைநகர் காத்மண்டுவிலும் படையினரும் பொலீஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.**

நேபாளத்தில் பட்டத்து இளவரசரான திபேந்திரா நேற்று அதிகாலை சிகிச்சைகள் பயனளிக்காத நிலையில் மரணமானதை அடுத்து நாட்டின் புதிய மன்னராக - காபந்து மன்னராக இருந்த - ஜியானேந்திரா முடிசூடிக்கொண்டார்.

புதிய மன்னராக ஜியானேந்திரா முடிசூடிக்கொண்டதை அடுத்து நேபாளத்தில் பெரும் வன்முறை வெடித்துள்ளது.

நேபாளப் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலாவுக்கு எதிராகவும் புதிய மன்னர் ஜியானேந்திராவுக்கு எதிராகவும் தலைநகர் காத்மண்டுவிலும் நாட்டின் முக்கிய நகரங்களிலும் மக்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களிலும் வன்முறைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைபதற்குப் பொலீஸார் தடியடிப் பிரயோகமும் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சும் நடத்தியுள்ளனர்; சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாராயண் ஹைட்டி அரண்மனையைச் சுற்றி பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. காத்மண்டு நகர வீதிகளில் இராணுவமும் கலகம் அடக்கும பொலீஸாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னர் குடும்பத்தவர்கள் கூண்டோடு கொல்லப்பட்டது தொடர்பான உண்மை விவரங்கள் வெளியிடப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர் கோரி வருகின்றனர்.

இதேவேளை -

புதிய மன்னராகப் பதவியேற்றதும் உரையாற்றிய புதிய மன்னர் ஜியானேந்திரா மன்னர் குடும்பத்தினரைப் பலிகொண்ட அரண்மனைப் படுகொலைகள் தொடர்பான உண்மைகளை விரைவில் வெளிக்கொண்டு வரப் போவதாகச் சூளுரைத்தார்.

அரசமைப்பு நெருக்கீடுகளுக்கும் சட்டச் சிக்கல்களுக்கும் உட்பட்டுச் செயற்பட வேண்டி இருந்ததாலேயே - "மன்னர் குடும்பத்தினர் திடீரென இயக்கப்பட்ட இயந்திரத் துப்பாக்கியால் படுகொலை செய்யப்பட்டனர்" என்ற தெளிவில்லாத அறிக்கை வெளியிடப்பட்டது - என்றார்.

இப்போது நிலைமைகள் மாறிவிட்டதினால் உண்மையைக் கண்டறிந்து அதனை மக்களுக்குத் தெரியப்படுத்தப் போவதாகவும் அவர் சொன்னார். (ம)

### பங்களாதேஷ் குண்டு வெடிப்பில் 9 பேர் பலி

டாக்க,ஜூன்5

பங்களாதேஷின் தென்பகுதி நகர் ஒன்றில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் குறைந்தது 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர்; மேலும் 20 பேர் காயங்களுக்கு உள்ளாகி உள்ளனர்.

ஆலயத்தில் ஞாயிறு ஆராதனை இடம்பெற்றுக் கொண்டு இருந்த சமயம் இந்தக் குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

### சிங்கப்பூர் உதைப்பந்தாட்ட வீரர் அடித்துக் கொலை

சிங்கப்பூர்,ஜூன்5

சிங்கப்பூரில் பிரபல உதைப்பந்தாட்ட வீரரான கலைமான் ஹாஷிட் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் சிங்கப்பூர் தேசிய அணியின் 18 வயதுக்கு உட்பட்ட பிரிவில் உறுப்பினராக உள்ளார்.

இளைஞர்கள் குழுவொன்று இவரைத் தடிகளால் தாக்கியுள்ளது. காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஹாஷிம் அங்கு உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. சிங்கப்பூர் உதைப்பந்தாட்டத்துறைக்கு இவரது மறைவு பெரும் இழப்பாகுமெனக் கூறப்படுகிறது. (ஐ-7)

## மன்னர் குடும்பத்தின் மறைவுக்கு

# மொட்டையடித்துத் துக்கம் அனுஷ்டித்த நேபாள இளைஞர்கள்!

காத்மண்டு,ஜூன்5

நேபாள மன்னரும் அவரது குடும்பத்தினரும் படுகொலை செய்யப்பட்டதற்குத் துக்கம் அனுஷ்டிக்கும் முகமாக நேபாள இளைஞர்கள் பலர் இந்து முறைப்படி தமது தலைகளை மொட்டை அடித்துள்ளனர்.

மொட்டைத் தலைகளுடன் இவர்கள அரண்மனைக்கு வெளியே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். மன்னர் குடும்பத்தவரின் படுகொலைக்கான உண்மைக் காரணங்கள் தங்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோஷம் எழுப்பியதாகக் கூறப்பட்டது.

அதேசமயம் -

தலைநகர் காத்மண்டுவில் மன்னரும் அவரது கும்பத்தவர்களும் படுகொலை செய்யப்பட்டதற்கு இளவரசர் திபேந்திராவே காரணம் என்று செய்தி வெளியிட்ட இந்தியப் பத்திரிகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தீயிலிட்டுக் கொளுத்தினர். (ம-5-9)



**நேபாளத்தில் புதிய மன்னராக ஜியானேந்திரா முடிசூடிக்கொண்டதை அடுத்து தலைநகர் காத்மண்டுவில் பெரும் ஆர்ப்பாட்டங்களும் வன்முறைகளும் இடம் பெற்று வருகின்றன.**

**தலைநகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம். மன்னர் குடும்பக் கொலை தொடர்பான உண்மைநிலை தெரிய வேண்டுமென இவர்கள் கோருகின்றனர்.**

### ஜஸ்வந்சிங் ரஷ்யாவுக்கு விஜயம்

மொஸ்கோ,ஜூன்5

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த்சிங் 4 நாள் உத்தியோகபூர்வ விஜயமாக ரஷ்யா சென்றுள்ளார்.

ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஹாஹி இவானோவ் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் இகோர் இவானோவ் ஆகியோருடன் ஜஸ்வந்த்சிங் பேச்சு நடத்துவர். (ம-25-9)

# உலகின் அதி உயரமான வானியல் ஆய்வு மையம்

## இந்திய மலையில் அமைப்பு

புதுடில்லி,ஜூன்5

உலகில் அதிக உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள வானியல் ஆய்வு மையம் இந்தியாவில் நேற்று முன்தினம் காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லாவால் திறந்து வைக்கப்பட்டது.

லடாக் பகுதியின் லேயில் இருந்து 300 கிலோமீட்டர் தொலைவில் உள்ள 'ஸாரேஸ்வர் ஹனி' சிகரத்தில் இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது. பிரதிபலிப்புத் தொலை நோக்கி, 'இன்பறா' சிவப்புக் கதிர்கள் மூலம் பிரபஞ்சத்தைப் படம் பிடிக்கும் கருவி ஆகியவை உட்பட அதி நவீன சாதனங்களை இந்த மையம் கொண்டுள்ளது.

## சோதனைகளில் இருந்து தப்ப

# ஆப்கானில் உள்ள இந்துக்கள் மஞ்சள் பட்டி அணிய வேண்டும்

## தலிபான்கள் கடுமையான உத்தரவு

காபூல்,ஜூன்5

ஆப்கானிஸ்தானில் உள்ள இந்துக்கள் மஞ்சள் பட்டிகளை அணிந்து கொள்ள வேண்டும் என்று தலிபான் ஆட்சியாளர்கள் கடுமையான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளனர்.

முஸ்லிம்களிடம் இருந்து இந்துக்களை இலகுவில் வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே இந்த ஏற்பாடு என்றும் தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

நாட்டில் உள்ள முஸ்லிம்கள் இஸ்லாமியச் சட்டங்களைச் சரியாகப் பின்பற்றுகிறார்களா என்பது தொடர்பாக அதிகாரிகளால் திடீர் திடீர் என நடத்தப்படும் தீவிர சோதனைகளில் இருந்து இந்துக்கள் தப்பிக்கொள்வதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தலிபான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலிபான்களின் இந்தச் சட்டத்தை மனித உரிமைக் குழுக்களும் உலக நாடுகளும் ஐ.நாவும் கடுமையாகக் கண்டனம் செய்துள்ளன. இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் இத்தகைய பாரபட்சம் காட்டப்படுவது மிகவும் கண்டிக்கத்தக்க விடயம் என்று ஐ.நா. பொதுச்செயலர் கோபி அனான் தெரிவித்துள்ளார். (ம-5-9)

உலக அரங்கில்

# அரபாத்தின் போர் நிறுத்த அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்பட முடியாதது

## இஸ்ரேல் தெரிவிப்பு

டெல் அவிவிவ்,ஜூன்5

இஸ்ரேலில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் அறிவித்த போர் நிறுத்த நடைமுறைப் படுத்தப்பட முடியாதது என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

யசீர் அரபாத்தின் போர் நிறுத்த முயற்சிகளை வலுப்படுத்த சர்வதேச சமூகம் [illegible] மோதல் தவிர்ப்பு நடைமுறைப்படுத்தப்படுவது சாத்தியமற்றது என இஸ்ரேலின் உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்நிறுத்த முயற்சிகள் சீர்குலைந்து விடும் அபாயம் இன்னமும் இருப்பதாக இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் ஷிமோன் பெரஸ் தெரிவித்தார்.

இதேவேளை -

இஸ்ரேலிய மற்றும் பலஸ்தீனத் தலைவர்களுடன் பேச்சு நடத்திய ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் வெஸ்கோ பிஸர்ஸ் இன்னும் இரு நாள்களுக்குள் இரண்டு தரப்புகள் இடையிலும் மோதல் தவிர்ப்பு உடன்பாடு ஒன்று எட்டப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தான் நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலைமைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆராயவென விசேட ரஷ்யத் தூதுவர் ஒருவர் நேற்று டெல் அவிவ் வந்து சேர்ந்துள்ளார். (ம-5-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட தேருக்குக் கட்டும்(எட்டுக் கொண்ட) வாகைமாலை, வெல்வெற்றுப் பட்டுக்குடை என்பன மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. (கையிருப்பு சொற்பம்) தொடர்பு:- சிவ.க.வே.சரவணமுத்து, பலாலி வீதி, கோண்டாவில். (88557)

பாவித்த, தேக்கினால் செய்த இரு, **SHOWCASE** (8), ஒரு **DRESSING TABLE**, பெரிய மேசை, **SINGER ZIGZAG (MODEL 298)** தையல் இயந்திரம், **GAS COOKER, MITSUBISHI PEDESTAL FAN**, அம்மி, ஆட்டுக்கல், கல்உரல் என்பன விற்பனைக்கு உண்டு. இல.12, 6ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர் மடத்தில் பார்வையிடலாம். (88675)

## மணப்பெண்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர், 1969ஆம் ஆண்டு ரெயில்வே காட், 1966ஆம் ஆண்டு மாஸ்ரர் (ஆசிரியர்), 1966ஆம் ஆண்டு கிளரிக்கல், 1971ஆம் ஆண்டு சிவில் எஞ்சினியர், 1967ஆம் ஆண்டு மாஸ்ரர் (ஆசிரியர்) ஆகிய மணமகன்மாருக்கு பாவம் குறைந்த மணப்பெண்கள் தேவை. தொடர்பு: கிருஷ்ணா திருமண சேவை, T.சுப்பையா, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (88679)

## தவறிவிட்டது

நவக்கிரி, புத்தூர் எனும் முகவரியுடைய சின்னத்துரை இராஜேஸ்வரி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.456460321V) யாழ்.பஸ் நிலையத்துக்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் கடந்த 13.04.2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஸ்ரீஅபிராமி நகையகம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (88660)

இல.56 பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த நாகேந்திரம் இரட்ணேஸ்வரி ஆகிய எனது தே.அ.அ.(இல.656170395v), வி.அ.அ(இல.0901018756) என்பன வண்ணார்பண்ணை பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலில் 1-6-2001 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் அல்லது பொ.தெய்வேந்திரம், 385, K.K.S.வீதி, யாழ்ப்பாணம் கடையில் ஒப்படைக்கவும். (88682)

அளவெட்டி கும்பலையைச் சேர்ந்த கந்தசாமி கொன்செப்ரலா என்பவருடைய தே.அ.அ(808450330v), விசேட அ.அட்டை(இல.0907002202) ஆகியன (2-6-2001) சங்கானைக்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில், அல்லது பிளாக் றோட், சங்கானையிலுள்ள "ரதி தையல் நிலையத்தில்" ஒப்படைத்து உதவவும். (88684)

## மணமகன் தேவை

இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நட்சத்திரம் பூசம் 4ஆம் பாதம் (1968 பகல் 3.23க்குப் பிறந்த) செவ்வாய்க்குற்றம் இல்லாத தபாலதிபராக (போஸ்மாஸ்ரர்) கடமையாற்றும் மணமகளுக்குத் தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தகுந்த சீதனம் வழங்கப்படும். மணமகன அரச தொழில் புரிபவர் விரும்பத்தக்கது. தொடர்பு:- **UNITED**, திருமண சேவை, க.ஜெயராணி, நவாலி வடக்கு. (சனசமூக நிலையத்துக்கு அருகில்) (88665)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூ 350/-) தொடர்பு:- பாரதி, 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.3081

(C/16990)

## இறைச்சிக்கோழி விற்பனை

Broiler, Cullbirds, Cockerels இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் காலை 6.30 - மாலை 6.00 வரை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(88676)

## உரும்பிராயில் விளையாட்டு நிகழ்வு

கோப்பாய்,ஜூன்5

உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலைய இலக்குமி அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனசமூக நிலைய முன்றிலில் பிற்பகல் 2 மணிக்கு தலைவர் பி.நந்தினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.ஈஸ்வரநாதன் கலந்து கொள்வார்.

(க-72)

## கோப்பாயில் தலைமைத்துவ பயிற்சி நெறி

கோப்பாய்,ஜூன்5

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிநெறி எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதிவரை கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு மேலதிக மாவட்ட செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் பிரதம விருந்தினராகவும் மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் எஸ்.செல்வரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வுகளின் இணைப்பாளராக கோப்பாய் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.வை. இராஜராஜேஸ்வரன் கலந்துகொள்வார்.

(க-72)

## பழைய மாணவர் சங்கம்
### புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை
### விசேட பொதுக்கூட்டம்

*விடயம் :* கல்லூரி தின விழா தொடர்பான கலந்துரையாடல்
*காலம் :* இன்று (05.06.2001) செவ்வாய்க்கிழமை) மாலை 3.00 (பு.நே)
*இடம் :* புனித. அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.

அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது சமுகம் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

**இ.ஜெயால்ட் அன்ரனி,**
*செயலாளர்,*
*பழைய மாணவர் சங்கம்,*
*புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை*

(88693)

## அந்தியேட்டி அழைப்பு

நாளை (06-06-2001) புதன்கிழமை காலை 8.00 மணியளவில்
எமது மகன்

**அமரர் கோபாலபிள்ளை தினகரதாஸ்**

அவர்களின அந்தியேட்டிக்கிரியைகள் எமது இல்லத்தில் நடைபெறும். அந்த வைபவத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கிளான்,*
*துன்னாலை தெற்கு.* (C/16995)

தா.கோபாலபிள்ளையும்
குடும்பத்தினரும்.

## அரசாங்க அறிவித்தல்
### பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனை
### சுகாதார சேவைகள்,
### யாழ்ப்பாணம்.
### தளபாடங்கள், உபகரணங்கள் வழங்கல்

பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு மரத் தளபாடங்கள் இரும்புருக்குத் தளபாடங்கள், உபகரணங்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் என்னால் 27.06.2001 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும். இதற்கான கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புவோர் மீளளிக்கப்படாத பிணைப்பணமாக ரூபா 100உம் மீளளிப்புடனான கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 5000/= உம் செலுத்தி 06.06.2001 ஆம் திகதி முதல் இப்பணிமனையில் பெற்றுக்கொள்வதுடன் மாதிரிகளையும் பார்வையிடலாம். படிவங்கள் 26.06.2001 ஆம் திகதி பிற்பகல் 3.00 வரை வழங்கப்படும். இக்கேள்விப்பத்திர உறைகள் அரக்கு முத்திரை இடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் "பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு தளபாடங்கள், உபகரணங்கள் வழங்கு வதற்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரம் திறக்கப்படும்போது கேள்விப்பத்திரதாரரும் சமுகம் அளிக்கலாம். ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விதாரர் ஒருமாத காலத்துக்குள் குறிபிட்ட பொருள்களை தாங்களே எமது பணிமனையில் ஒப்படைக்கவேண்டும். மரத் தளபாடங்கள் யாவும் வேப்பமரத்தினால் செய்யப்பட்டு இரு தடவைகள் வாணிஸ் பூசப்படல் வேண்டும். இரும்புருக்குத் தளபாடங்கள் அன்ரிக்குறொஸ் அடித்து இரு தடவைகள் வர்ணம் பூசுதல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் பணிமனை நேரத்தில் எனது பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் ஒப்பந்தம் பொருத்திக் கொள்ளும்போது சித்தி பெறும் கேள்விக்காரர் மொத்த வழங்கல் தொகையின் பத்து வீதம் பாதுகாப்பு பிணைப்பணமாகச் செலுத்த வேண்டும். மாதிரிக்கு அமையாததும் தரமற்றதுமான பொருள்கள் நிராகரிக்கப்படும்.

**வைத்திய கலாநிதி உ.சிவபாதசுந்தரம்,**
*மாகாணப் பிரதிப்பணிப்பாளர்,*
*சுகாதார சேவைகள்,*
*கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/16994)

## கொள்ளைகளுடன் தொடர்புடைய
# 6 பொலீஸ் அதிகாரிகளை கைது செய்ய நடவடிக்கை

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் 6 பொலீஸ் அதிகாரிகளைக் கைது செய்ய பொலீஸார் நாடெங்கும் வலை விரித்துள்ளனர் என சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் கே.ஜி.பத்திரன தெரிவித்துள்ளார்.

சிலாபம் பொலீஸ் பிரிவைச் சேர்ந்த மேற்படி பொலீஸ் அதிகாரிகள் பொலீஸ் சீருடை அணிந்தவாறே பொலீஸ் உத்தியோகபூர்வ வாகனத்தில் சென்று கொள்ளைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் -

கடந்த 31ஆம் திகதி பொலன்னறுவை, ஹபரணை ஆகிய இடங்களில் உள்ள நகைக்கடைகளுக்குச் சென்ற இந்தப் பொலீஸ் குழுவினர் பத்து லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்றும் -

இந்தக் குழுவில் அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரும் அடங்குகின்றார் என்றும்-

பொலீஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்துள்ளார். (க-7)


TRUE! WE ARE IN JAFFNA NOW

நிலங்கெழில்

NILANKELZHIL

★ Hair Styles ★ Bridal Dressing
★ Saree Draping ★ Saree Tussling
★ Beauty Culture - *Facial, Bleaching, Eyebrow Shaping Make-up, Manicure & Pedicure*
★ Cake Making - *Cake Icing, Cake Structure Wedding Cake & Birthday Cake*

**Personalised Beauty Care**
**393/33, TEMPLE ROAD, NALLUR, JAFFNA.**

(C/16992)


எழுத்து, பேச்சு, ஊடகம் ஆகியவற்றின் சுதந்திர உரிமைக்காக உயிர் பறிக்கப்பட்ட உண்மையாளன்

**மயில்வாகனம் நிமலராஜன்**

அவர்களது

## 40ஆவது பிறந்த நாள் நினைவு

செய்திக்காக 05 - 06 - 1961



செய்தியாய் 19 - 10 - 2000

*எங்கள் அன்புச் செல்வமே,*
*உனக்குத் தெரிந்த மூன்று மொழிகள்*
*அதிர்ந்து; மௌனித்திருந்த போது*
*உலக மொழிகள் உன் பெயரை*
*உச்சரித்துக் கொண்டிருந்தன.*

உன் பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.

(C/16988)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லமுத்து நாகலிங்கம்

(செல்லம்)

பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், தற்பொழுது கொழும்பில் (312/ 1/5 ஹத்தலொக் றோட், கொழும்பு5) வசித்தவருமாகிய திருமதி செல்லமுத்து நாகலிங்கம் 2001-06-03 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்துள்ளார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகேந்திரராசா(இயந்திரப் பொறியியலாளர்- அல்ஜீரியா), நாகேந்திரராணி( பதில் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்), புவனேந்திரராசா (கேமஸ் அச்சகம் - தெஹிவளை), இந்திராணி(தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச சபை, நாரஹேன்பிட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும், புவனேஸ்வரி (ஆசிரியர், வீரசிங்கம் மகாவித்தியாலயம் - மீசாலை), தங்கராசா (சமாதான நீதவான், Road Maintanances Contractor Highways) பவானி (Colombo) சாந்தகுமார் (Ticketing agent, Colombo) ஆகியோரின் மாமியாரும், நயந்தா, நர்மதா, நக்கீரன், பவித்திரா, துசானி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக பொரளை A.F Raymonds மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நாளை (06-05-2001) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*224, சேர்.பொன்.இராமநாதன் வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.* (88687)

தகவல்:-
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை அறுபதில் யாழ்.றோட்டரிக் கழகம்

## Message from the R.I.President



Dear Fellow Rotarians,

As your President for the year 2000-2001 when we are entering a new century and a new millennium, I am keenly aware that our clubs, our communities, and our world have an array of problems that are not being adequately addressed. As Rotarians, we can choose to overlook or ignore these problems or we can do something about them.

In our desire to do something about the problems we face in clubs, communities, and the world at large, we find that it is always necessary to CREATE AWARENESS. Once that crucial first step is taken, there is not turning back. Creating awareness opens Rotarians' eyes to problems. When Rotarians are made aware of a problem, we begin to talk and discuss and debate the best course to take. We seek out non-Rotarians and other groups to join our cause, draw up feasible plans, and then we TAKE ACTION.

As we work together in 2000-01, let us never forget that our mission is to CREATE AWARENESS and TAKE ACTION in our clubs, our communities, and throughout the world.

**Frank J.Devlyn**
*RI. President, 2000-2001*

## Message from District Governor Elect



It gives me great pleasure to send this message on the eve of the 60th Anniversary Celebration of the Jaffna Rotary. The Rotary Club of Jaffna is one of the oldest Clubs in the Island and is actively involved in providing humanitarian services to the Northern people.

I am happy to say that the Rotary Club of Jaffna has done excellent work during the past 60 years. I take this opportunity to congratulate the President and the members of the Rotary Club of Jaffna for completing 60 years of service in the Rotary organization which is the first service organization in the world.

I wish you all success.

**Rtn.PHF.Dr.V.Vijayakumaran**
*District Governor Elect 2001/2002*

## Message from The President



As we find that our Club completes 60 years of service to humanity we feel elated. Looking back at the challenges, the trials and tribulations, and the achievements of our Club, any Rotarian could feel gratified.

During the last two decades, our Club went through very trying times - problems of communication, transport, bans, disruption of postal services, migration, calamities and many more - still the club functioned against all these odds. The spirit of service, that was the need of the day, kept the Club intact and in high motivation.

In spite of all these handicaps the Club performed magnificently in the year 1994/95 under the presidentship of Rtn.PP PHF E.Saravanapavan and Won seven awards including the best president and best Club awards at the District Assembly held in May '95.

Though our Club had undergone many ups and downs, like the mythical bird Phoenix, the Club functions with more enthusiasm and vitality after each setback. That is the Spirit of Service above Self. My best wishes for the incoming President and his team.

**Rtn.A.Panchalingam**
*President 2000/2001*
*Rotary Club of Jaffna.*

## Message from The Past President



I take pride, as past president of the Rotary Club of Jaffna and being a member of the Club from 1988, in sending this little message of goodwill on the 60th year celebration of the Rotary Club of Jaffna.

Celebrating sixty years of the Rotary existence in Jaffna is indeed a great achievement of humanitarian services carried out to serve the less fortunate among our community. It is evident that for more than 15 years, the Club has gone through a period of turmoil owing to the situation that prevailed in the North. However, the dedication and commitment has kept the Club in action to serve the under-privileged.

It is the invisible determination and courage that has superseded all obstacles, to march forward to provide a better quality of life to the community. I am very hopeful that you have the strength and capacity to face the new challenges in the year to come, and would labour indefatigably to bring about a qualitative change in the life style of the suffering masses whose contentment and happiness is the main objective of the Rotary as a whole.

On this occasion, we must resolve that we will continue to render the best of service to our people under whatever circumstances we are compelled to go through in the years to come. Let us endeavour to uplift the standard of life of our under-privileged brethren.

**Rtn.PHF E.Saravanapavan.**
*President 1994/1995*
*Rotary Club of Jaffna.*

## மனங்களிந்து வரவேற்கின்றோம்

சர்வதேச றோட்டறியின்

இலங்கை மாவட்ட ஆளுநர்

றொட்டேரியன் கிரிஷ் இராஜேந்திரன்

**அவர்களையும் அவர் தம் குழுவினரையும் வருக வருக என யாழ். றோட்டறிக்கழகத் தலைவர் பஞ்சலிங்கமும் கழக உறுப்பினர் களும் வரவேற்கின்றார்கள்.**

### WARM WELCOME

**Jaffna Rotary Cordially welcomes the visiting Governor Rtn.Krish Rajendran and his entourage on the occasion of its Diamond Jubilee Celebrations.**

## யாழ். றோட்டறிக் கழக வைரவிழா

இடம் :- யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

காலம் :- இன்று காலை

*நிகழ்ச்சி நிரல்:-*

9.25 - அழைப்பினர் வருகையும் அமர்வும்.

9.30 - றோட்டறி மாவட்ட ஆளுநர் வருகையும் ஊர்வலமாக மண்டபவாயிலுக்கு அழைத்து வருதலும்.

9.45 - ஆளுநரினால் மங்கல விளக்கேற்றல்

9.50 - கூட்ட ஆரம்பம் - றோட்டறி கீதம் இசைத்தல.

9.55 - நினைவு கூரல்

10.00- வரவேற்புரை

10.05- தலைவர் உரை

10.10- மாவட்ட ஆளுநரை அறிமுகஞ் செய்தல்

10.15- மாவட்ட ஆளுநர் உரை

10.30- வைர விழா சிறப்பு மலர் பற்றிய அறிமுக உரை - சிறப்பு மலர் வெளியீடு - விசேட பிரதிகள் வழங்கல்

10.45- வசதி வாய்ப்புகளற்ற சிறுவர்களிடையே கணனி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்து முகமாக சம பங்களிப்பு நிதியத்தின் கீழ் யாழ்.றோட்டறிக்கழகத்திற்கு ஆளுநரினால் கணனி வழங்கல்.

10.50- மாசார் அனர்த்தத்தில் தமது இரு பெற் றோர்களையும் இழந்து ஏதிலிகளான மூன்று சிறுவர்களுக்கும் பொது மக்களிட மிருந்து யாழ். றோட்டறிக்கழகத்தினால் சேகரிக்கப்பட்ட நிதி கையளிப்பு.

10.55- ஈ.எஸ்.பேரம்பலம் நாகரத்தினம அவர் களின் ஆதரவுடன் மாசார் ஏதிலிகளுக்கான புலமைப் பரிசின் முதலாவது மாதத் தவணை நிதி கையளிப்பு.

11.00- யாழ்.விஞ்ஞான சங்கமும் யாழ்.றோட்ட றிக்கழகமும் இணைந்து சுடரொளி ஆதர வுடன் நடத்திய மாணவ ஆராய்ச்சியாள ருக்கான விருதுகள் வழங்கல்.
அறிமுகம்:- திருமதி என். கிருஷ்ணபிள்ளை
(யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் பீடம்)

11.15- இன்றறக்ட் கழக விருதுகள் வழங்கல்.

11.35- மாவட்ட ஆளுநரினால் புதிய அங்கத்த வர்கள் றோட்டேரியன்களாகப் பதவியமர்த் தல்.

12.00- வெளிவாரிப் பட்டப்படிப்பு மற்றும் டிப் ளோமாக் கற்கைநெறிகள் மூலம் உயர் கல்விக்கான வசதிகளை வழங்கிய அர்ப் பணிப்புக்கான கௌரவம்.
பெறுநர்:- உபவேந்தரும் பேராசிரியருமான திரு. பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள

12.20- நன்றியுரை.

## Message from the District Governor



It gives me great pleasure in forwarding this message on the occasion of the Diamond Jubilee Celebrations of the Rotary Club of Jaffna.

I congratulate the Rotary Club of Jaffna for doing various humanitarian projects for the needy ever since the Club was chartered in 1941. I must make special reference to PP Saravanapavan who was able to keep the Club alive during difficult times. I am eagerly waiting for my visit to Jaffna and like to be present personally at the Diamond Jubilee Celebrations and also visit your project sites.

I must also be thankful to our GGR PP Keetheswaran and Action Team President Rtn.Panchalingam who were instrumental for putting up a project proposal during the current Rotary year on "Computer Awareness Amongst School Children of Jaffna District" to the Rotary Foundation to obtain funds with the help of RI District 3000and our District.

Let me wish Rotary Club of Jaffna all the very best and I'm sure this Club will grow from strength to strength, and I wish them all success.

Together let us Create Awareness and Take Action.

**Rtn.Krish Rajendran**
*District Governor 2000/2001*

## Message from GGR



I am privileged and pleased to send this Congratulatory Message on the occasion of the diamond jubilee Celebration of the Rotary Club of Jaffna.

I must be thankful to our District Governor Krish Rajendran, not only for appointing me as GGR during his term but also for allocating US$ 1500 from his DDF for a worthy project namely, "Computer Awareness Amongst School Children of Jaffna District" proposed by the president Rtn.A.Panchalingam and by myself. Also I like to thank DG C.Backer from R.I District 3000 (India) who has also allocated US$ 1500 from his own DDF for this project.

I am aware that Rotary Club of Jaffna has done yeoman service to Jaffna and I had the opportunity of associating with five Past Presidents, namely Rtn. Dr.c.Mahenthiran, Rtn.T.S. Mahendran, Rtn.K.Karunai Anandan, (who later joined Rotary Club of Colombo Mid Town, before I was elected President), Rtn.E.Saravana Bawan and late PDG Rajalingam and the present president Rtn.A.Panchalingam who was my teacher and past principal of Kokuvil Hindu College.

The President has been working untiringly and devotedly for the betterment of the Rotary Club of Jaffna and I take this opportunity to wish the Rotary Club of Jaffna to grow stronger in the years to come to be of more beneficial to the people of Jaffna.

**GGR PP K.Ketheeswaran**
*2000/2001*

## Message from The President Colombo East R C



The President and Members of the Rotary Club of Jaffna,

About 25 years ago, on the 8th of April, the 'Godfather', Part II was awarded the Oscar for the best picture of 1974, an offer, the producers could not refuse.

On the same day, 60 years ago. the Rotary Club, Jaffna opened its Rotary Service for the people of Jaffna. This offer to the citizens of Jaffna could never have been refused. I can imagine the trials and tribulations that would have been faced by the Rotary Club of Jaffna and its members over the period of 60 years.

The demands on the Club over the past decade or so would have certainly been beyond human perception. I cannot possibly imagine any other Rotary Club in Sri Lanka, which would have faced greater challenges than that of the Rotary Club of Jaffna. Not only the people in Jaffna were displaced, but also the Rotarians.

In spite of the vagaries and the destructions, man has chosen, the Rotary Club of Jaffna continued to emarge as an institution serving humanity, in the most positive humane manner. You are an example of one who has worked in the Rotary spirit, under the most trying circumstances.

The impressions of Rotary in the hearts and minds of the people of Jaffna will vary. Some impressions will be larger, deeper, more penetrative and permanent than others. The most important impression of the spirit of Rotary is the service to humanity. The Rotary Club of Jaffna has remained and we hope will remain forever to demonstrate that spirit of Rotary.

All the very best.

**Rtn.Mohan Lalchand**
*President 2000/2001*
*Rotary Club of Colombo East.*

# JAFFNA ROTARY CELEBRATES ITS SIXTIETH YEAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் நட்டாங்கண்டல்

# மகப்பேற்று மருத்துவமனையில் குடிதண்ணீர் வசதி இல்லை

மன்னார்,ஜூன்5

மனனார் நட்டாங்கண்டல் மத்திய மகப்பேற்று மருத்துவமனையில் குடி தண்ணீர் இல்லாமல் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகளினால் சில காலம் இயங்காதிருந்த இந்த மருத்துவமனை தற்பொழுது இயங்கத் தொடங்கியுள்ள போதிலும் நோயாளர் களுக்கு குடிதண்ணீர் வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இங்குள்ள கிணறு பழுதடைந்த நிலையில் இருப்பதினாலே குடிதண்ணீர் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மருந்துப் பொருள்களுக்கும் இங்கு பூலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளர்கள் சிகிச்சைக்கு வேண்டிய மருந்துகளை இந்த மருத்துவமனையில் பெறமுடியாத நிலையேற்பட்டுள்ளது. (ஐ-5)

## சேவை நலன் பாராட்டல்

### திருமதி புஸ்பகாந்தி சோதிலிங்கம்

யா/யாழ். இந்து மகளிர் கல்லூரியில் 15.02.1980 தொடக்கம் சேவையாற்றிய திருமதி புஸ்பகாந்தி சோதிலிங்கம் அவர்கள் 05.06.2001 இல் இருந்து ஓய்வுபெறுகிறார். இவர் சிறந்த விஞ்ஞான ஆசிரியையாகவும், பகுதித்தலைவராகவும் எமது கல்லூரியில் கடமை புரிந்தவர். முப்பது வருடகால அவரது கல்விச்சேவை பாராட்டுக்குரியது. அவர் தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ இறைவனருளை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலக ஆளணியினர்,
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி.

(88572)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகு 12 - 06 - 1934
விண்ணுலகு 18 - 05 - 2000

### அமரர் கதிரன் மாதர்

(கைதடி தெற்கு, கைதடி)

திதி:-05-06-2001

எமது அன்புத் தெய்வமே ஐயா!
உங்களது உன்னத இலட்சியங்களை
எங்களது நெஞ்சமதில் இனிதே சுமந்து
நீங்கள் காட்டிய நேரிய பாதையில்
நாங்கள் உறுதி பூண்டு செல்வோம்.

"சிவகுலம்"
கைதடி வடக்கு,
கைதடி.

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(88643)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 15 - 07 - 1933
மறைவு 10 - 06 - 2000

### அமரர் கந்தையா வல்லிபுரம்

திதி:-05-06-2001

பாசத்தோடு எம்மைக் காத்த
அன்புத் தெய்வமே நீங்கள்
ஒளியோடு சேர்ந்த ஓராண்டில்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
ஆண்டவரை வேண்டுகின்றோம்.

நிரந்தர முகவரி:
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

உயிருள்ளவரை உங்கள் நினைவில்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(88502)

## ரிக்கெற் இன்றி விமானத்தில் ஏறியோர் கைது

சென்னை,ஜூன்5

இலங்கைக்குச் செல்வதற்கு ரிக்கெற் பெற்றுவிட்டு சிங்கப்பூர் செல்லும் விமானத்தில் பயணம் செய்ய முயன்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று இலங்கைத் தமிழர்கள் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

திருமதி சுபலட்சுமி பாலேந்திரா என்பவரும் அவரது இரு புதல்வியருமே கைது செய்யப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகிறது.

சிங்கப்பூர் செல்லும் விமானத்தில் அதிகாரிகள் பயணிகளிடம் சோதனை நடத்தியவேளை இவர்கள் மூவரும் ரிக்கெற் பெறாமலேயே பயணம் செய்ய முயன்றதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

இது குறித்து அறிவிக்கப்பட்டதை அடுத்து விமான நிலையப் பொலீஸாரால் சம்பந்தப்பட்ட மூவரும் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பான விசாரணைகள் தொடர்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-164)

## கையெழுத்து இயக்கம்

கொழும்பு,ஜூன்5

பொசன் போயா தினமான இன்று இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு விரைவில் காணப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி தென்னிலங்கையைச் சேர்ந்த பௌத்த மத குரு பீடம் ஒன்று 10 லட்சம் பேரிடம் கையெழுத்துப்பெறும் நடவடிக்கையைத் தொடங்கவுள்ளது.(ஒ-3)

## பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

கோண்டாவில்,ஜூன்5

நல்லூர்ப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நூறு சிறார்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மற்றும் தாய், தந்தையரை இழந்த சிறார்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

நல்லூர்ப் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திரு.சி.வேல் முருகவேல்பிள்ளை தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.(ம-86)

## ஆசிரிய ஆலோசகர்கள் நியமனம்

தென்மராட்சி,ஜூன்5

தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்துக்கு கணிதம், இந்துசமயம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலாசகர்கள் கடந்த முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கணித பாடத்துக்கு அ.கனகசபையும், இந்து சமய பாடத்துக்கு செல்வி இராசமலர் இராமலிங்கமும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-117)

## இருவர் உயிரிழப்பு

வவுனியா,ஜூன்5

மணலாறுப் பகுதியில் கடந்த மாதம் 18ஆம் திகதி இராணுவத்துடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் தமது தரப்பில் சேரவாணி (யோகநாயகம் பத்மாவதி - மட்டக்களப்பு) என்பவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இசசம்பவத்தில் விழுப்புண் அடைந்திருந்த எல்லைப் படையைச் சேர்ந்த 2ஆம் லெப்டினன்ட் சந்திரன் (இராசலிங்கம் ரவிச்சந்திரன் - யாழ்ப்பாணம்) என்பவர் கடந்த மாதம் 31ஆம் திகதி உயிரிழந்ததாகவும் அறிவிக்கப்பட்டது. (ஐ-5)

## கல்வியை ஊக்குவிக்க விசேட திட்டம்

தென்மராட்சி,ஜூன்5


தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்று எதிர்வரும் டிசெம்பரில் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தமிழ், ஆங்கிலம், வரலாறும் சமூகக்கல்வியும் ஆகிய பாடங்களில் அதிக பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்வதற்கான விசேட செயற்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

விசேட செயற்றிட்டத்தின்படி மாணவர்களுக்கு விசேட வகுப்புகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும்-

இதற்கென 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா வரையில் செலவாகலாமென மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

வடககு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரிலேயே இந்த விசேட செயற்திட்டம் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கந்தரோடைக் கிராமத்தைச் சேர்ந்தவரும், கந்தரோடை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், சுன்னாகம் ப.நோ.கூ.ச. கந்தரோடைக் கிளைத் தலைவரும், தமிழர் ஆசிரியர் சங்க மானிப்பாய்த் தொகுதிக் கிளையின் முன்னாள் தலைவரும், ஞானவைரவர் ச.ச.நிலையப் போசகரும், சமயத் தொண்டரும், சமூக சேவையாளரும், இளைப்பாறிய அதிபருமான

### திரு.தம்பு நடராசா

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கந்தசாமி ஆசிரியர் வீதி,
கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

ஞான வைரவர் ச.ச.நிலையம்,
ஞானவைரவர் விளையாட்டுக்கழகம்,
ஞானவைரவர் ஆலயம்.

(C/16982)

## முதலாம் ஆண்டு நீங்கா நினைவுகளில்



நேமியில் 23 - 07 - 1940
நிலமடியில் 17 - 05 - 2000

### அமரர் சபாபதி திருநாவுக்கரசு

*(முன்னாள் அதிபர், யா/கலட்டி மெ.மி.த.க. பாடசாலை, யா/நல்லூர் சாதனா சி.சி.த.க. பாடசாலை)*

திதி: 05.06.2001

நிமலன் திருவடி நிழலில் நிறைகின்ற எங்கள் ஐயா!
ஓராண்டு எம்மை விட்டுப் பிரிந்தும்,
நெஞ்சங்களில் பசுமையாக நிறைகின்ற பேராளனே!
பண்பால் அன்பால் அனைவரையும் அரவணைக்கும்
அதிபர்கோ ஆண்டாண்டு நினைவு கூரும்
பெருமைக்குரியவரே! எம் அன்பு நெஞ்சங்களில்
என்றும் நிலைக்கும் நின் நாமம், ஐயா!


உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

1/5, மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி,
மகள், மருமகன்,
சகோதரன், பெறாமக்கள்.

(88617)

## ஓராண்டு நினைவு



மலர்வு 1929 - 01 - 18
உதிர்வு 2000 - 05 - 18

### அமரர் வல்லிபுரம் சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய சுங்க உத்தியோகத்தர்)

திதி:- 05.06.2001

மாதங்கள் பன்னிரண்டு மாயமாய் மறைந்து
ஆண்டொன்று ஆனதே ஐயா!
உங்கள் அன்பும், பாசமும், பரிவும்
மனதை விட்டகலாதே.......

"சிவஸ்தான்"
நச்சனோடை,
புலோலி தெற்கு,
புலோலி.

உங்கள் மறைவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்.

(88603)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சைவ பரிபாலன சபையின் சைவநெறித் தேர்வு முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ். சைவ பரிபாலன சபையினரால் கடந்த வருடம் நவம்பர் மாதம் நடத்தப்பட்ட சைவ நெறித் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

தரம் 2 முதல் தரம் 13 வரையிலான வகுப்பு மாணவர்களுக்காக நடத்தப்பட்ட இந்தப் பரீட்சையில் ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப் பதக்கம், வெண்கலப்பதக்கம் என்பன வழங்கப்படவுள்ளன.

சித்திபெற்ற மாணவர் விவரம் வகுப்பு ரீதியாக வருமாறு:- [பாடசாலை விவரம் அடைப்புக் குறிக்குள் உள்ளது],

### தரம் 2

சஞ்சீவா அருணாசலம் [கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை], சிந்துஜா நவரத்தினம் [கட்டைவேலி மெ. மி. த. க. பாடசாலை], அம்பிகா விஸ்வலிங்கம்(கரணவாய் வேதாரணியேஸ்வர வித்.).

### தரம் 3

சிவாத்மீகா சிறீரங்கன் [துன்னாலை காசிநாதர் வித்.] சிவறதினி சிவஞானராசா [ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்.], சிவபாலன் றஜீதன் [மானிப்பாய் விவேகானந்த வித்.].

### தரம் 4

துவாரகா ஜெகதாஸ் [யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை], ஜஸ்மினி சண்முகலிங்கம் [நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலை], விதுஷினி பரமலிங்கம் (ஆனைப்பந்தி மெ. மி. த. க. பாடசாலை),

### தரம் 5

ரோகிணி இராமச்சந்திரன் (சென். ஜோண் பொஸ்கோ), வதனகுமாரி அருந்தவராசா (கெருடாவில் இ. த. க. பாடசாலை), பவித்திரா சந்திரகுமாரன் (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை).

### தரம் 6

காயத்திரி ஜெயவீரசிங்கம் (மானிப்பாய் மெமோறியல்), தர்ஷினி உருத்திரகோடீஸ்வரன் (வேம்படிமகளிர்), ஜனனி முருகையா (அனலை தீவு சதாசிவ ம. வி.)

### தரம் 7

வலாஜி சிவஞானராசா (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), றபிந்தா ஐயாத்துரை (சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி), நிரஞ்சன் சத்தியசீலன் யாழ்ப்பாணக்கல்லூரி),

### தரம்8

கஜேந்தி சிவநாதசம்பந்தன் (வடமராட்சி இந்துமகளிர்), சூரியாகிருஷ்ணபவான்(வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ரோகிணி நாகலிங்கம் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

### தரம் 9

தனேஷன் சபாநாதன் (யாழ். இந்துக்கல்லூரி), ராதிகா சிவராசன் (மானிப்பாய் மகளிர்கல்லூரி), சிவாஜினி குமாரசாமி (கொக்குவில் இந்துக்கல்லூரி).

### தரம் 10

கஜானந் நல்லை வரோதயன் (பரியோவான் கல்லூரி), சுவப்னா சந்திரகுமார் ஸ்ரான்லிக்கல்லூரி), குமாரசாமி கிருத்திகன் (ஹாட்லிக்கல்லூரி).

### தரம் 11

மகிஜினி பாலச்சந்திரன் (மகாஜனக் கல்லூரி), அமுதாயினி செல்லத்துரை (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), தர்மினி தியாகராசா (இணுவில் இந்துக் கல்லூரி).

### தரம் 12
### இந்து நாகரிகம்

பிரியந்தினி ஸ்ரீதரன் (யாழ். இந்து மகளிர் கல்லூரி), தம்பிராசா நித்தியவான் (அச்சுவேலி மத்திய கல்லூரி), விஜிதா வேலாயுதம் (மல்லாகம் ம. வித்.)

### தரம் 13
### இந்து நாகரிகம்

சிவயோகலிங்கம் நந்தகுமார் (வட்டு. இந்து), யாழினி இராமுப்பிள்ளை (நெடுந்தீவு ம. வி.), சுஜீபா சிவலிங்கம்(செங்குந்த இந்து).

### தரம் 13(இந்து சமயம்)

விஜிதா வரதராசா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சுபாஷினி சுந்தரலிங்கம் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வித்.), மகிழினி பவளநாதன் (அத்தியார் இந்துக் கல்லூரி).

இதேவேளை —

மேற்படி பரீட்சைக்கு அதிக எண்ணிக்கையான மாணவர்களை தோற்றச் செய்த கல்லூரிகளுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி முதலாம் பரிசை யாழ். இந்து மகளிர் கல்லூரியும், இரண்டாம் பரிசை யாழ். இந்துக் கல்லூரியும், மூன்றாம் பரிசை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் பெற்றுள்ளன என சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் வ. கந்தசாமி தெரிவித்தார். (க-7)

# இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியா முழு ஆதரவு வழங்கும்
## ரணிலிடம் பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு

புதுடில்லி, ஜூன் 5

இனப்பிரச்சினைக்கு கூடிய விரைவில் தீர்வொன்றைக் காண்பதற்காக இந்தியா இலங்கைக்கு தனது முழுமையான ஆதரவை வழங்கும்.

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் புதுடில்லியில் தன்னைச் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்தசனியன்றுஇடம்பெற்ற இந்தச் சந்திப்புக் குறித்து ஐ. தே. கட்சியின் தலைமையகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக இந்தியப் பிரதமருக்குத் தெளிவுபடுத்திய ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒற்றையாட்சி அமைப்புக்கோட்பாட்டின் கீழேயே காணப்பட வேண்டுமென்பதில் ஐக்கிய தேசியக்கட்சி உறுதியாக இருக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் விவகாரம் தொடர்பில் இந்தியப் பிரதமர் கையாண்ட நடவடிக்கைகளையிட்டு ரணில் விக்கிரமசிங்க தமது பாராட்டைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்தியப் பிரதமருடனான சந்திப்பின் போது பிரதமரின் செயலாளரும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான டமிஸ்ரா வெளியுறவு அமைச்சின் இணைச் செயலாளர் லீலா பொன்னப்பா ஆகியோரும் பங்குபற்றினர்.

இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்கு முன்னதாக ரணில் விக்கிரமசிங்க முன்னாள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்துப் பேசியதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

# அச்சுவேலி நகர வாய்க்கால்கள் கழிவுகள் நிரம்பி துர்நாற்றம்
## பொதுச் சுகாதாரம் பெரிதும் பாதிப்பு

அச்சுவேலி, ஜூன் 5

அச்சுவேலி நகரில் வீதியோரக்கால்வாய் சுத்திகரிக்கப்படாமல் கழிவுப் பொருள்கள் நிரம்பிய நிலையில் காணப்படுவதால் பொதுச் சுகாதாரத்திற்குப் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் புகார் செய்கின்றனர்.

அச்சுவேலி பிரதான வீதியோரத்தில் வீதிக்கு மேற்குப் புறமாக அமைந்துள்ள கால்வாய் பொருத்தமான முறையில் சுத்திகரிக்கப்படாமல் வியாபார நிலையக்கழிவுகள், அழுகிய உணவுப் பொருள்கள் மற்றும் கழிவுகள் போடும் இடமாகக் காணப்படுகின்றது.

வியாபார நிலையங்கள், உணவுப் பொருள்கள் விற்பனை நிலையங்கள், சிற்றுண்டிச் சாலைகள் என்பனவற்றின் வாசலில் அமைந்துள்ள கால்வாய் கழிவுப்பொருள் வீசப்படும் இடமாகப் பயன்படுத்தப்படுவதால் பொதுச் சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிப்பதாகக் காணப்படுவதுடன் துர்நாற்றமும் வீசுகின்றது.

அச்சுவேலி நகர வர்த்தகர்கள் கழிவுப் பொருள்களைப் போடுவதற்கான தொட்டிகளோ மற்றும் அமைப்புக்களோ இல்லாததால் நகரின் பொதுவான அழகும் சீர்குலைக்கப்பட்டுள்ளதாகப் புகார் கூறப்படுகிறது. (க-11)

# கொட்டடியில் இன்று முழுநிலா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்ப்பாணம் கொட்டடி சனசமூக நிலைய முழுநிலா கலை நிகழ்ச்சிகள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள நிலைய கலையரங்கில் நிலையச் செயலாளர் ந. பிரபாகரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் யாழ். மாநகர ஆணையாளர் இராசா தணிகாசலம் கலந்து கொள்வார்.

''எங்கள் கலாசாரம் எங்கே செல்கிறது?'' எனும் தலைப்பில் கவிஞர் எம். பி. அருளானந்தம் சிறப்புப் பேருரை நிகழ்த்துவார். தொடர்ந்து பட்டிமண்டபம் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (க-73)

# தீவக வலயப் பாடசாலைகளில் இன்று 'சமூகக்கல்வி தினம்'
## கலை நிகழ்வுகளும் இடம் பெறும்

தீவக வலயப் பாடசாலைகளில் இன்று 'சமூகக் கல்வி தினம்' கொண்டாடப்படுகின்றது.

'புரிந்துணர்வுள்ள சமூக வாழ்வை நோக்கி' என்ற பொருளில் அனுஷ்டிக்கப்படவுள்ள இந்தத் தினத்தில் தீவக வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் கருத்தரங்குகள், ஆய்வரங்கம், அறிவியற் போட்டிகள், மரம் நடுகை கற்றல்,கற்பித்தல் உபகரணக் கண்காட்சி, மலர் வெளியீடு' சிரமதானம், விவாதம், வில்லுப்பாட்டு, நாடகங்கள், சிறுவர், முதியோர் கௌரவிப்புகள் இடம்பெறவுள்ளன.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனின் நெறிப்படுத்தலில் வலயத்தின் சமூகக் கல்விப் பாட ஆசிரிய ஆலோசகர் த. தர்மராஜா இந்த நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (க-7)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஜூன் 5

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில்இன்று செவ்வாய்க்கிழமை அண்ணா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:-

பெண்கள் அணியில், கோண்டாவில் மறுமலர்ச்சி வி. க. எதிர் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி. க.

ஆண்கள் அணியில் கோண்டாவில் மறுமலர்ச்சி வி. க. எதிர் சிவசக்தி வி. க.

(க-86)

★ ★ ★

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பாடசாலை அணிகளின் 15, 17 வயதுப் பிரிவினர்களுக்கிடையேயான சுற்றுப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை இடம் பெறவுள்ளது.

ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:

### 15 வயதுப் பிரிவு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (ஹாட்லிக் கல்லூரி மைதானம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் சென் பற்றிக்ஸ் கல்லூரி (யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்)

### 17 வயதுப் பிரிவு

கொக்குவில் இந்துக்கல்லூமு எதிர் மகாஜனக் கல்லூரி. (கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்)

(க-86)

# இறைச்சிக்காக வெட்டப்படும் பசுக்கள்

காரைநகர், ஜூன் 5

காரைநகர் பகுதியில் சட்டவிரோதமான முறையில் பசுக்கள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு வருகின்றன என்று ஊர்மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பசுக்கள் இறைச்சிக்காக வெட்டப்படுவது குறித்து இங்கு வாழும் சைவப்பெரியார்கள் அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளனர்.

பசுவதை மேற்கொள்ளப்பட்டு வருவதையும், சட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருவதையும் உரிய அதிகாரிகள் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க மாட்டார்களா என்று இவர்கள் அங்கலாய்க்கின்றனர். (க 73)

# சித்திரப்போட்டியில் வெற்றிபெற்றோர்

அச்சுவேலி, ஜூன் 5

தேசிய போஷாக்கு வாரத்தை முன்னிட்டு அச்சுவேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு மட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் வெற்றியீட்டியவர்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் இடம்:- ச. கஜிர்தா அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி.

இரண்டாம்இடம்: அ. கபிலன் அச்சுவேலி மத்திய கல்லூரி.

மூன்றாம்இடம்: இ. குகதீசன் இடைக்காடு மகாவித்தியாலயம்.

''வாழ்க்கை முழுவதற்குமான கண்பராமரிப்பிற்கு உயிர்ச்சத்து ஏ'' என்ற தொனிப்பொருளில் சித்திரப் போட்டி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (க-11)

# குரு பூசை

யாழ்ப்பாணம், ஜூன் 5

அகில இலங்கை திருமுறை மன்றம் நடத்தும் திருஞானசம்பந்தர் குருபூசை நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை நல்லூர் சட்டநாதர் ஆலயத்தில் இடம் பெறும். அங்கு திருஞானசம்பந்தருக்கு அபிஷேகம்,விசேட பூசை இடம்பெறும். (ஐ)

# தவறவிட்ட தங்க நகை

வலிகாமம், ஜூன் 5

அளவெட்டி தெற்கு சூசையப்பர் கோயில் அருகே — பிரதான வீதியில்—பெறுமதிமிக்க தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு வலி. வடக்கு பிரதேச செயலகத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதனை உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளும்படி வலி. வடக்குப் பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் கேட்டுள்ளார். (ஒ)

# வதிரி இளைஞரை காணோம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் காணவில்லை என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெல்லியடி, வதிரிப் பகுதியைச் சேர்ந்த சின்னவன் பிரபாகரன் (வயது 18) என்பவரே காணாமற் போனவராவார்.

கடந்த 31 ஆம் திகதி நண்பகல் வீட்டில் சண்டையிட்டுக்கொண்டு தனது தேசிய அடையாள அட்டையையும் சகோதரியின் முகத்தில் வீசிவிட்டுச் சென்ற இவர் இதுவரை வீடு திரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி நெல்லியடியில் உள்ள ஈ. பி. டி. பி. அலுவலகத்திலும் முறையிட்டதாகவும் அங்கு அவர்கள் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொண்டு இளைஞரைக் கண்டுபிடித்துத் தருவதாகக் கூறியதாகவும் அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படையினர் சூட்டில் பெண் காயம்

வாகனேரியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் வீதி ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஆலங்குளத்தைச் சேர்ந்த எஸ். தங்கமணி (வயது37) என்பவரே காயமடைந்து வாழைச்சேனை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமது குடிசைக்கு முன்னால் காலையில் சுத்தம் செய்துகொண்டிருந்த போதே இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். வாகனேரி இராணுவ முகாமிலிருந்து வீதிக் காவல் கடமைக்குச் சென்றுகொண்டிருந்த படையினர் வீதியின் இரு மருங்கிலும் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டு சென்ற வேளையிலேயே இவர் சூட்டுக்கு இலக்கானார் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-7)

# நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எதிராக சிங்களக் கடும் போக்காளர் தீவிர பிரசாரம்

கொழும்பு,ஜூன்5

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் சமாதானப் பேச்சுக்களுக்கான முயற்சிகளை உடனடியாக நிறுத்த வேண்டுமெனக் கோரும் கடும் போக்குடைய சிங்கள பௌத்த அமைப்புக்களின் பிரசார நடவடிக்கைகள் தீவிரமடையத் தொடங்கியுள்ளன.

இந்தச் சமாதானப் பேச்சுக்களால் பெரும் ஆபத்துக்கள் உருவாகப் போவதாகக் கூறி கடந்த வாரம் தேசிய கூட்டுக் குழு, தேசிய சங்க சபா சிங்கள ஜாதிக சங்கமய மற்றும் சில அமைப்புக்களும் கூட்டம் ஒன்றை நடத்தியிருந்தன.

இதன்போது இந்தப் பேச்சுக்களால் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு பேராபத்து ஏற்படப் போவதாகவும் இந்தப் பேச்சுக்களை அரசு கைவிடாவிடின் இந்த நிலைமை ஏற்படுவது தவிர்க்கப்படமுடியாது போய்விடுமெனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போது இந்தச் சமாதானப் பேச்சுக்களுக்கு எதிராக குரலெழுப்பி வரும் இந்த அமைப்புக்கள் இது போன்ற மற்றுமொரு கூட்டத்தை இவ்வாரம் கண்டியில் நடத்தவுள்ளன. தொடர்ந்து மற்றொரு கூட்டம் தெற்கில் நடைபெறும்.

ஒவ்வொரு கூட்டத்திலும் சமாதானப் பேச்சுக்கள் உடனடியாகக் கைவிடப்பட்டு நாட்டின் ஒற்றையாட்சி முறை பேணப்பட வேண்டுமென வலியுறுத்தப்படும்.

இலங்கையின் தற்போதைய பிரச்சினைக்கான ஒரே தீர்வு புலிகளை இராணுவ ரீதியில் அழிப்பதே என்பதுதான் இந்த அமைப்புக்களின் நிலைப்பாடாகும். இந்தத் தீர்வுக்கே சிங்கள கடும்போக்கு அமைப்புக்கள் பௌத்த மக்களிடம் ஆதரவு கோரி வருகின்றன. (க-7)

## கல்லூரிக்கு மதில்

சண்டிலிப்பாய்,ஜூன்5

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் சுற்றுமதில் புதிதாகக் கட்டப்பட்டு வருகின்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இதற்கான நிதியை வழங்கியிருப்பதாக கல்லூரி அதிபர் தெரிவித்தார். (க-135)


A TALK BY

ROTARY DISTRICT GOVERNOR

**Rtn.KRISH RAJENDRAN**

(DATA MANAGEMENT SYSTEMS Ltd, COLOMBO)

"DOS and DON'TS IN AN INTERVIEW"

VENUE : DEPARTMENT OF MANAGEMENT, UNIVERSITY OF JAFFNA.

TIME : 4.00 p.m.

DATE : 05-06-2001 (TUESDAY)

ALL INTERESTED ARE CORDIALLY INVITED

(C/16989) ROTARY CLUB OF JAFFNA.


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 02 . 10 . 1961

இறைவன் அடியில் 05 . 06 . 1996

### அமரர் நடராசா சேகர்

(உரிமையாளர், சேகர்ஸ் றெக்கோடிங்பார், நெல்லியடி)

**திதி: 09.06.2001**

ஐந்து ஆண்டுகள் சென்றாலும்
ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
வித்தாகப் போன பின்பும் - எம்மனதில்
விருட்சமாக வாழ்கின்றாய் வேரூன்றி.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கும்:

- குடும்பத்தினர்.

*"மிதிலை"*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

(88650)

## நீங்காத நினைவுடன் ஓராண்டு நினைவஞ்சலி



தாயவள் மகிழ்ந்திட 1971 - 06 - 30

தரணியில் நாம் கதறிட 2000 - 05 - 17

### சுப்பிரமணியம் சரவணபவானந்தன்

**(ஆனந்தன்)**

*(கைதடி மேற்கு, கைதடி)*

**திதி: 2001.06.05 (வைகாசிப் பூரணை)**

ஆனந்தன் இன்றி ஆண்டொன்று ஆனதனால்
ஆனந்தமும் இழந்தோம்!
ஏனிந்த வாழ்வென்று ஏக்கம் விட்டபடி
இதயச் சுமையோடு இங்கு நாம் வாழ்கின்றோம்?
ஊனை உருக்குலைத்த உன் மரணம்
ஒரு நாளும் இன்னோர்க்கு வரவேண்டாம்!
வானவர்க்கு(த்) தொண்டு செய்து வாழ்ந்துவிடு ஆனந்தா!
வந்தங்கு சந்திப்போம் வேறென்ன செய்வோம் நாம்?

என்றென்றும் உன் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

*கைதடி மேற்கு,*
*கைதடி.*

என்றும் உன் நினைவுடன்
(88677) அப்பா, அம்மா, சகோதரர்கள்.

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

காந்தி ஸ்ரோர்ஸ், ஏழாலை வடக்கைச் சேர்ந்த
செல்வநாதன் - சுமதி தம்பதிகளின்
செல்வப் புதல்விகள்





செல்வி செ.பானுஜா    செல்வி செ.சாருஜா

இன்று (05-06-2001) செவ்வாய்க்கிழமை தனது 4ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் சாருஜாவையும், 25-03-2001 அன்று தனது 5 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடிய பானுஜாவையும் அப்பு சுந்தரலிங்கம், அம்மம்மா பராசக்தி, பெரியமாமா சுதாகர் (இத்தாலி), சின்னமாமா சுகுமார் (லண்டன்) ஆகியோர் ஞானவைரவர் அருளுடன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழகவென வாழ்த்துகிறார்கள.

*ஏழாலை வடக்கு.* (88659) - க.சுந்தரலிங்கம்.

உ

## வல்வை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

## பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அம்பாள் அடியார்களே!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் வைகாசி மாதம் 24ஆம் திகதி (07.06.2001) வியாழக்கிழமை பகல் 9.10 மணிமுதல் 10.41 மணி வரையிலான மூலநட்சத்திரம் கூடிய கடகலக்கின சுபமுகூர்த்தத்தில் அம்பாளுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அத்தருணமும் அதற்கு முதல் நாளும் நடைபெறும் கிரியைகளில் அம்பாள் அடியார்கள் யாவரும் ஆசார சீலர்களாக வருகைதந்து எம்பெருமாட்டியை வழிபட்டு இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

### கிரியாகால விவரங்கள்

**வைகாசி மாதம் 23ஆம் திகதி நாளை (06.06.2001) புதன்கிழமை**

காலை 7.46 மணியின் மேல் கர்மாரம்பம், அனுஞ்ஞை, வாஸ்துசாந்தி, மாலை 4 மணியின் மேல் கடஸ்தாபனம், யாகபூசை, கலாஹர்சனம், க்ஷணஹோமம், கும்பம் யாகசாலாபிரவேசம், வேதிகாபூஜை, ஓமம், இரவு 9.45 மணியின் மேல் 11.50 மணிக்குள் பிம்பஸ்தாபனம்.

**வைகாசி மாதம் 24ஆம் திகதி (07.06.2001) வியாழக்கிழமை**

காலை 9.10 - 10.41 மணி அளவில் விஷேசபூசை, பூர்ணாகுதி, பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும். 11.00 மணியளவில் அபிஷேகம், பூசை.

*பாலஸ்தாபன பிரதமகுரு:* "சிவாகம சித்தாந்த ஞானதேசிக பானு" "பிரதிஷ்டாலங்கார சித்தாந்தஷாகரம்" "பிரதிஷ்டா சிரோன்மணி"

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் J.P.** *(மேற்படி ஆலய பிரதமகுரு)*

அடியார்கள், பக்தர்கள் அனைவரும் பால், தயிர், இளநீர், புஸ்பம், மாலை போன்றவற்றைக் கொண்டுவந்தும், தொண்டாற்றியும் எம்பெருமாட்டியின் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

---

பாலஸ்தாபனத்தைத் தொடர்ந்து திருப்பணி வேலைகளை விரைவாகப் பூர்த்தி செய்து கும்பாபிஷேகம் எனும் புனித கைங்கரியம் நிறைவேற இருப்பதால் தாங்கள் மனமுவந்து அளிக்கும் உதவிகளை

**வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,**
சேமிப்புக் கணக்கு இலக்கம் 17222,
மக்கள் வங்கி,
வல்வெட்டித்துறை,
ஸ்ரீலங்கா.

[illegible] வைக்குமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

*வல்வெட்டித்துறை.* (88678) - மேற்படி தேவஸ்தான தர்மகர்த்தசபையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 30 - 04 - 1998

இறப்பு 06 - 05 - 2001

## செல்வி கருணாகரன் சர்மிலி

மழலையாய் வந்த எங்கள் மனம் நிறைந்த சர்மிலியே!
அழகோடு ஆசை பொங்க ஆண்டாயே எமை அன்பினாலே!
மூன்றாண்டுகள் தானம்மா உன் மழலை மொழி கேட்டோம்!
ஆண்டாண்டு காலத்திலும் நாம் மறப்போமோ உன் நினைவை?

பிரிவால் துயருறும்:
தந்தை, தாய்,
சகோதரர், உறவினர்கள்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(88702)

# கண்ணீர் அஞ்சலி

## Dr.T. அருமைத்துரை R.M.O.

சங்கானை அரசினர் வைத்தியசாலையில்
13 வருடங்களாகச் வேவையாற்றிய

DR.T.அருமைத்துரை R.M.O.

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைவதோடு எமது கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திப்பதோடு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வைத்தியர்கள்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

அரசினர் வைததியசாலை,
சங்கானை.

(88507)

சிவமயம்

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் - இலங்கை

# விசேட மஹாசபைக் கூட்டம்

(சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி தெரிவு)

மேற்படி கூட்டம் நாளை (06–06–2001) புதன்கிழமை பி.ப 1.00 மணிக்கு தலைவர் பிரம்மஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள் தலைமையில் நீராவியடி கல்லூரி வீதியிலமைந்த நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

அங்கத்துவ அந்தணப் பெருமக்கள் அனைவரும் சமுகம் தந்து குருபீடாதிபதியைத் தெரிவுசெய்து ஒத்துழைப்பு நல்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகரசர்மா
பொதுச் செயலாளர்

தலைமைச் செயலகம்,
74, பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(88695)

## திருட்டுத் தொடர்பாக நால்வர் கைது

யாழ்ப்பாணம்,ஜூன்5

திருட்டுச் சம்பவம் தொடர்பாகக் கோப்பாய் பொலீஸாரால் கைது செய்யபபட்ட நால்வர் நேற்று யாழ்நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மானிப்பாய்ப் பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து அங்கிருந்த சைக்கிள், ரேடியோ, டெக் ஆகியவற்றைத் திருடிய சம்பவம் தொடர்பாக்வே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஜெயராஜ் சுரேஸ்குமார் (ஐந்து சந்தி, யாழ்.), ஸ்ரீகண்ணன் ரஜீவ்நாத் (கட்டைப்பிராய்), பூலோகசிங்கம் செல்வக்கிருஸ்னன் (கொட்டடி, யாழ்) செபஸ்ரியன் தவக்குமார் (மூத்தவிநாயகர் கோயிலடி, நல்லூர்) ஆகிய நால்வருமே ஆஜர் செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் நால்வரையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ஐ-10)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜூன்5

கோப்பாய் தெற்கு அத்தித்தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 6.30மணிக்கு இடம்பெறவுள்ளன.

கும்பாபிஷேகக் கிரியைகள் நாளை புதன்கிழமை காலை 7 மணி முதல் ஆரம்பமாகி இடம்பெறும். (ஐ-7)

## சூழல் தின பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்.பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் ஏற்பாட்டில் சூழல் தினத்தினை முன்னிட்டு கலைப்பீட மாணவர்களுக்கு இடையிலான பொது அறிவு மற்றும் சுவரொட்டிப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

கலைப்பீட மாணவர்களின் பொது அறிவுத்திறன் மற்றும் கலைத் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் நடத்தப்படவுள்ள இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் புவியியல்துறை அலுவலகத்தில் மாதிரி விண்ணப்பப் படிவத்தை பெற்று பூர்த்தியாக்கி எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறும் புவியியற் கழக தலைவர் எஸ்.ரவீந்திரன் தெரிவித்தார். (ஐ-6)

## பாதுகாவலர் தேவை

பாதுகாப்புச் சேவைக்கு தற்காலிக பாதுகாவலர்கள் உடன் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் இம் மாதம் 6ஆம் திகதி புதன், 7ஆம் திகதி வியாழன் ஆகிய இருநாள்களில் மாலை 5-6 மணிக்கு இடையில் நேரில் வரவும்.

பாதுகாப்புச் சேவை,
சீயோன் தேவாலய வளவு,
லவ்லேன், உடுவில்.

# காணவில்லை



## திருமதி வெற்றிவேல் இராஜேஸ்வரி

என்ற 40 வயதான இவரை கடந்த மாதம் 25.05.2001 முதல் காணவில்லை. இவர் ஒரு மன நோயாளி. இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கங்களுக்கோ தயவுசெய்து அறியத்தரவும்.

T.P:- 021 3277
070 213019
070 213014

திரு.சீ.வெற்றிவேல்,
மந்திகை அம்மன் கோயிலடி,
புலோலி.

(88697)

# கண்ணீர் அஞ்சலி

எமது அருமை நண்பனும் எங்கள் கல்லூரி மாணவனுமாகிய
அ.அரிகரன் அவர்களின் பாசமிகு தந்தையார்

## Dr.தம்பிஜயா அருமைத்துரை

(பொறுப்பதிகாரி, அரசினர் வைத்தியசாலை, நவாலி)

அவர்களின் திடீர் மறைவு கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளோம். அவர்தம் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரினது ஆத்மா இறைபதம் சேர்ந்து பேரின்பப் பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

(A/L 99) கணிதப்பிரிவு மாணவர்கள்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(88704)

# கண்ணீர் அஞ்சலி

எமது யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த களஞ்சியப் பொறுப்பாளரும், எமது நலன்புரிச் சங்கத்தின் பொருளாளருமான
மு.சிவானந்தன் அவர்களின் அன்புத் தந்தையார்

## வயிரப்பிள்ளை முருகையா

அவர்கள் 01-06-2001 அன்று காலமானதையிட்டு மனங் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்,
நலன்புரிச் சங்கம், யாழ்.பிரதேச செயலகம்.

(88703)

# கண்ணீர் அஞ்சலி

எமது தபாலதிபர் ஐயாத்துரை லோகஞானம் அவர்களின்
அன்புச் சகோதரி

## திருமதி தங்கமலர் இராசரத்தினம்

(பதிவாளர், புலோப்பளை)

அவர்கள் 04-06-2001இல் சிவபதம் அடைந்தமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
உதவித் தபாலதிபர்கள்,
உப தபாலதிபர்கள்,
சக ஊழியர்கள்.

தபாலகம்,
சுன்னாகம்.

(88698)

# மரண அறிவித்தல்

## திருமதி கனகசபை இராசம்மா

சிறுப்பிட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட திருமதி கனகசபை இராசம்மா அவர்கள் நேற்று (04.06.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் கனகசபையின் அன்பு மனைவியும், திருமதி முத்துப்பிள்ளை சிவகுமாரதாஸ், வல்லிபுரநாதன் (ஆசிரியர், ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்) சுப்பிரமணியம் (சின்னத்துரை) ஆகியோரின் அன்புத் தாயாரும் முத்துக்குமாரு சிவகுமாரதாஸ்(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக்களம் - கந்தரோடை) அவர்களின் அன்பு மாமியாரும், சிவகுமாரதாஸ் அபிராமியின்(மாணவி, யா/வேம்படி பெண்கள் கல்லூரி, யாழ்ப்பாணம்) பிரிய பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2001) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.வல்லிபுரநாதர்
க.சுப்பிரமணியம்
(மகன்மார்)
மு.சிவகுமாரதாஸ்
(மருமகன்)

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி.

(88701)

தில்லையம்பதியாள் துணை

# இன்று கோண்டாவில் தில்லையம்பதியில் பூரணைத் தீர்த்தத்திருவிழா

ராகம்: ரஞ்சனி தாளம்:ஆதி

பல்லவி

மாண்பான தெய்வீக மாட்சிநிறை தலமான
கோண்டாவில் தில்லைப்பதி கோயில்கொண்டாள் சிவகாமி
(மாண்பான)

அனுபல்லவி

காண்பார்க்கு அருள்ஈயும் கடைகண்ணமதி அவள்
பூண்பாம்பு மங்கலநாண் பூரணியே நீ துதிப்பாய்
(மாண்பான)

சரணம்

மாமர நிழல் தனிலே வந்தமர்ந்த சிவகாமி!
மருவும் அடியருள்ளம் கொலுவிருந்தாள் தேவி
தேமதுரத் தமிழில் தேவி புகழ் பாடுவாய்
நாம மகிமையினால் நல்லருள் செய்திடுவாள்
(மாண்பான)

ஆக்கம்: அருட்கவிச் செம்மல் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்
பாடியவர்: கலைமாமணி ரி.எம்.சௌந்தரராஜன்

திருக்கோயில் பரிபாலன சபை



காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவம்
மாலை 4.00 மணிக்கு திருவிளக்குப் பூசை
[illegible]

விழா உபயகாரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழகத்தில் 433 பேருக்கு 'மஹாபொல'

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்.பல்கலைக்கழகத்தில் 2000 - 2001 ஆம் கல்வி ஆண்டில் கற்கும் மாணவர்களில் 433 பேர் மஹாபொல கொடுப்பனவுக்காகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினரால் தெரிவுசெய்யப்பட்ட 433 மாணவர்களினதும் பெயர் விவரங்கள் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களில் கலைப்பீடத்தில் இருந்து 178 பேரும், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் இருந்து 102 பேரும், மருத்துவபீடத்தில் இருந்து 48 பேரும், விவசாய பீடத்தில் இருநது 31 பேரும் அடங்குவர்.

இவர்களின் பெயர் விவரங்கள் பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மஹாபொல சான்றிதழ் வழங்கும் வைபவம் மிகவிரைவில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளதாக பல்கலைக்கழக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-6)

## கொலைக் குற்றம் சுமத்தப்பட்ட

# ஈழத் தமிழ் இளைஞர் மீது லண்டன் நீதிமன்றில் வழக்கு

லண்டன்,ஜூன்5

இலங்கைத் தமிழர் ஒருவரை கொலை செய்ததாகக் கூறப்படும் 19 வயதான மற்றொரு இலங்கைத் தமிழ் இளைஞர் மீது பிரிட்டிஷ் நீதிமன்றத்தில் கடந்த வாரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக 'லண்டன்' பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மனோகுமார் குமார்(வயது31) என்பவரை கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் இறுதியில், அவரது வீட்டுக்குள் நுழைந்து கோடரியால் தாக்கிக் கொன்றதாக ரூபன் தனபாலசிங்கம் (வயது 19) என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

'கிரடிட் கார்ட" மோசடியில் கிடைத்த லாபத்தை பங்கிடுவதில் எழுந்த தகராறே இந்தக் கொலைக்குக் காரணம் என்றும் -

குமாரின் வீட்டு ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்த ரூபன் குமாரைக் கோடரியால் தாக்கிக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றதாகவும் -

கொலைச் சம்பவத்தின் போது ரத்தத்தில் நனைந்த தனது ஆடைகளை சிலுவைசுக்ரி மனோ (வயது 27) என்பவரது வீட்டில் ரூபன் மறைத்து வைத்ததாகவும்

- பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஒ)

## மிதிவெடியில் சிக்கி காலையிழந்த இளைஞன்

யாழ்ப்பாணம்,ஜூன்5

சங்கத்தானைப் பகுதியில் நேற்றுக் காலை வீடு டார்க்கச் சென்ற இளைஞர் ஒருவர் மிதிவெடியில் சிக்கித் தனது இடது காலை இழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சங்கத்தானையிலிருந்து இடம் பெயர்ந்து மானிப்பாயில் வசித்து வந்த கந்தசாமி கருணாகரன் (வயது27) என்ற இளைஞரே இட்து காலை இழந்தவராவார். (ஒ-6-15)

நாளை
ஆரம்பம்!
A/L 2003
"தொங்கல் க/கு"
காலை - 6.15
கணக்கீடு
D.SAM
STC
சுன்னாகம்.
(88665)

A/L 2003
நிலையியல்-இயக்கவியல்
PHYSICS
Mr.றமேஸ்
ஆரம்பம் - 07.06.2001 4 மணி
வியாழன் - 4 மணி(மாலை)
வெள்ளி - 6.30 மணி(காலை)
STC
சுன்னாகம்.
(88689)

## வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தமிழ் விவகாரங்கள் அமைச்சு

## தகவல் தொழில் நுட்பப் பூங்கா - யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் தகவற் தொழில் நுட்பத் துறையை மேலும் விருத்தி செய்வதற்காக தகவற் தொழில்நுட்பத் துறையில் திறமையும் முன் அனுபவமும் உடையவர்களிடமிருந்து பொருத்தமான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவிகள் முழு நேரமாகவோ, பகுதி நேரமாகவோ அல்லது ஆலோசனை வழங்குதலாகவோ அமையும்.

1. தகவல் மென் பொருள் வடிவமைப்பாளர்
2. இணையத் தள வடிவமைப்பாளர்கள்
3. வன் பொருள் பொறியியலாளர்கள்
4. தொலைத் தொடர்பு மற்றும் சற்றலைட் தொழில் நுட்ப வல்லுநர்கள்
5. கணனி விரிவுரையாளர்கள்
6. கணனி உதவி விரிவுரையாளர்கள்
7. கணனி செய்முறைக் காட்டுநர்
8. எழுதுவினைஞர்கள் *(கணனி அறிவுடையவர்கள் விரும்பத்தக்கது)*

விண்ணப்பிக்கும் பொருத்தமான துறைகளில் அங்க்கரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறைந்தது ஒரு வருட முன் அனுபவத்தை விண்ணப்பதாரி கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

சுய விவரங்களை உள்ளடக்கிய விண்ணப்பங்கள் 15-06-2001 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ "இணைப்பாளர், தகவற் தொழில் நுட்பப் பூங்கா, இல. 272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு சாதாரண தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தகவற் தொழில் நுட்பம் சார்ந்த பதவிகளுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடவும்.

"இணைப்பாளர்"
*தகவற் தொழில் நுட்பப் பூங்கா,*
*யாழ்ப்பாணம்.*

(88670)

## வற்றாப்பளை பொங்கல் விழாவில் மக்கள் கூட்டம்

வவுனியா,ஜூன்5

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வைகாசி விசாகப் பொங்கல விழா இவ்வருடம் என்றுமில்லாதவாறு வானில் முகில் கூட்டங்கள் திரண்டிருக்க மழைத்தூறல்களுக்கு மத்தியில் நேற்றுச் சிறப்பாக நடைபெற்றதாக வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

பெரும் எண்ணிக்கையானோர் நேற்றைய பொங்கல் நிகழ்வில் பங்குகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

குடாநாட்டில் உள்ள அம்மன் ஆலயங்கள் பலவற்றிலும் நேற்று விசாகப் பொங்கல் நடைபெற்றது. (ஐ-5)

## கிளிநொச்சியில் நிலக்கண்ணிகள் மீட்பு

வவுனியா,ஜூன்5

கிளிநொச்சியில் படையினரால் புதைதது வைக்கப்பட்டிருந்த இரண்டு பாரிய நிலக்கண்ணிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டு மனிதநேய கண்ணி வெடியகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டன.

வெடிக்கும் நிலையில் இருந்த இக்கண்ணிவெடிகள் கிளிநொச்சிப் பகுதியை இராணுவத்தினர் கைப்பற்றியிருந்த சமயம் அவர்களால் புதைத்து வைக்கப்பட்டவை என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

## மணலாறில் புலி உறுப்பினர் மரணம்

வவுனியா,ஜூன்5

மணலாறுப் பகுதியில் கடந்த மாதம் 28ஆம் திகதி இராணுவத்துடன் இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் விடுதலைப் புலிகள் தரப் பில் கப்டன் கோபு(இராசையா ராஜ்குமார், அம்பாறை) என்பவர் உயிரிழந்ததாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை -

முல்லைத்தீவு, வட்டக்கச்சிப் பகுதிகளைச் சேர்ந்த இரண்டு நாட்டுப்பற்றாளர்கள் சுகயீனம் காரணமாக இறந்துள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி நாட்டுப் பற்றாளர் குமார் (பெருமாள் விஜயகுமார், பிரமந்தனாறு, விஸ்வமடு) என்பவரும் -

கடந்த வருடம் செம்ரெம்பர் 24 ஆம் திகதி நாட்டுப்பற்றாளர் மதி (வைரவன் வேலும் மயிலும், கல்மடு வட்டக்கச்சி) என்பவரும் உயிரிழந்ததாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்துள்ளது. (ஐ-5-164)

## மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட கந்தையா சின்னத்தம்பி இரத்தினசபாபதி என்பவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்று சிரேஷ்ட சட்டத்தரணியும் சத்திய ஆணையாளருமான அருளம்பலம் இராஜரட்ணம் முன்னிலையில யாழ்.மாநகரசபை உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

நல்லூர் ராணி வீதியைச் சேர்ந்தவரான சின்னத்தம்பி இரத்தினசபாபதி ஓய்வுபெற்ற பொலீஸ் சார்ஜன்ட் ஆவார். (ஐ-5)

## கஞ்சிகுடிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்களையும், மருந்து வகைகளையும் கைப்பற்றியதாகவும் -

அங்கு இடம்பெற்ற சண்டையில் சுமார் 15 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாகவும் -

இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மோதலில் கொல்லப்பட்ட புலி உறுப்பினர்களின் சடலங்கள் எனத தெரிவித்து 11 பேரின் சடலங்களைப் படையினர் நேற்று மாலை பொலீஸாரிடம் ஒப்படைத்ததாக அம்பாறைப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அக்கரைப்பற்று ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டிருந்த அந்த சடலங்கள நேற்றிரவு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் எதுவும் நேற்றிரவு வரை வெளியாகவில்லை. (ஐ-ஒ-5-4)

# கிளிநொச்சியில் விரைவில் தொழில் நுட்பக் கல்லூரி!

யாழ்ப்பாணம்,ஜூன்5

வன்னி மாவட்டங்களில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய பின்னர் உயர் கல்வியைத் தொடர முடியாமல் உள்ள ஆயிரக்கணக்கான மாணவர்களின் நன்மையைக் கருதி விரைவில் கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றைத் திறப்பதற்கு முழு முயற்சியும் எடுப்பேன்.

இவ்வாறு வடமாகாண தொழில் நுட்ப கல்லூரியின் பிரதிப் பணிப்பாளர் என்.யோகராஜன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

முதற்கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்திலும் தொடர்ந்து மன்னார், முல்லைத்தீவு, மாவட்டங்களிலும் மாணவர்களின் நன்மை கருதி தொழில்நுட்பக் கல்லூரிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதுவே எனது முதற்கடமையாகும். தற்போது தொழில் நுட்பக் கல்லூரிகளில் நடைபெற்று வரும் பயிற்சி நெறிகளிலும் ஒரு சில மாற்றங்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் வரை காத்திருக்கும் மாணவர்கள் நன்மை கருதி குறுங்காலப் பயிற்சி நெறிகளாக ஆங்கிலம் போன்ற கற்கை நெறிகள் இங்கு ஆரம்பிக்கப்படும்.

யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் ஜப்பான் மொழி ஒரு கற்கை நெறியாக ஆரம்பிக்கப்படவுள்ளது. தொழில் நுட்பத்தில் இலங்கை ஜப்பான் நாட்டுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்பதாலும் ஜப்பானுடன் இணைந்து செயற்பட்டு வருவதாலும் எமது மாணவர்களுககு ஜப்பான் மொழியைக் கற்பிப்பதற்காக இந்தக் கற்கை நெறியை ஆரம்பிக்கவுள்ளோம்.

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்பிராந்தியத்துடன் இணைந்து விஞ்ஞானமாணி கற்கை நெறியை வெளிவாரியாக ஆரம்பிப்பதற்கும் திட்டமிட்டுள்ளோம். மிகவிரைவில் அந்தக் கற்கை நெறியும் ஆரம்பிக்கபட்டுவிடும்.

யாழ்மாவட்டத்தில் நிலவும் தொழில நுட்பத்துறை சார் வெற்றிடங்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன கலந்துரையாடி, யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெறுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுபேன். இது தொடர்பாக நாம் எல்லோரும் கலந்துரையாடி முடிவெடுத்துள்ளோம் -

என்று அவர் தெரிவித்தார்.

இந்த வரவேற்பு விழாவில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் அ.சண்முகதாஸ உட்பட விரிவுரையாளர்களும உரையாற்றினர்.

நேற்றைய நிகழ்வின் போது வடமாகாண தொழில் நுட்பக் கல்லூரிகளின் உப அலுவலகம் திறந்துவைககப்பட்டது.

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அலுவலகத்தைத் திறந்து வைத்தா. பெயர்ப்பலகையை உயர்பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் திரைநீக்கம் செயதார்.

(ஐ-6)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பின் போது ஐ.தே. கட்சியின் எம்.பியான மிலிந்த மறகொட, இந்தியாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஆர்.மகேந்திரன், சென்னையில் உள்ள இலங்கைத் தூதரக அலுவலகத்தில் பிரதித் தூதராகப் பணியாற்றிய கலாநிதி வல்சன், உள்நாட்டு வர்த்தக நிபுணர் அர்ஜுனன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கச்சதீவு விவகாரம் தொடர்பாகவும், இந்தியக் கடல் எல்லைக்குள் நுழையும் இலங்கை மீனவர்கள் கைது செய்யப்படுவது குறித்தும் அப்போது ரணில் விக்கிரமசிங்க முதல்வர் ஜெயலலிதாவுக்கு எடுத்துக் கூறினார் என்றும் -

இலங்கை மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்பாக மத்திய அரசுடன் கலந்து பேசி, ஆவன செய்வதாக ஜெயலலிதா ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விவகாரங்கள் குறித்தும் தலைவர்கள் இருவரும் பேசியதா கவும் ஐ.தே.க.வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-ஒ-4-5)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் பெயர்கள் -

(ஆ) அவர்களுக்கு மாதாந்தம் அரசினால் வழங்கப்படும் தொகை-

(இ) முன்னாள் தீவிரவாதக் குழுக்கள் இப்போது அரசின் துணைப் படையாகப் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளன -

என்ற விவரம் -

(ஈ) அப்படி அமர்த்தப்பட்டிருந்தால் அவற்றின் பெயர்களும் துணைப் படை என்ற முறையில் அவர்களது பணிக்குச் செலுத்தப்படும் தொகை -

மேற்படி நான்கு விடயங்களையும் பாதுகாப்பு அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும் என்று விநாயகமூர்த்தி கேட்டுள்ளார். (உ)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முயற்சி வெற்றியடைந்து ஓர் உடன்பாடு ஏற்பட்டால் அதற்கும் ஐ.தே.கட்சி முழு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கும்.

இலங்கைப் பிரச்சினையில் தலையிடுவதில்லை என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை நான் வரவேற்கின்றேன்.

கச்சதீவுப் பிரச்சினை குறித்து இலங்கை - இந்திய அரசுகள் பேசித்தீர்வு ஒன்றைக் காணவேண்டும்.

- இப்படி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (உ-ஒ-4-5)

## படையினருக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வர் என்ற நம்பிக்கை அரசுக்கு உள்ளது.

விடுதலைப் புலிகள் இதுவரை சமாதான நடைமுறைகளைப் புறக்கணித்து வந்தனர். ஆனால் தற்போது அரசியல் தீர்வில் இணைந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மீது எப்போதும் இல்லாதவாறு நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

யுத்தத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியதும், அரசின் சிறந்த வெளிவிவகாரக் கொள்கைகளுமே இந்த நிலைமைக்கு வழிவகுத்துள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாட்டில் நிரந்தர அமைதியை நிலைநாட்ட அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது - என்று ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார்.(ஐ-ஒ)

## ஆளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர்கள் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் ஜனாதிபதி சந்திரிகா' குமாரதுங்க தலைமையில் நாளை மாலை நடைபெறவுள்ளது.

கல்முனை கரையோர மாவட்டம் அமைப்பது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## ஓமந்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனங்கள் மற்றும் டாங்கிகள், எறிகணைச் செலுத்திகள் சகிதம் பெரும் எண்ணிக்கையான படையினர் வவுனியா - மன்னார் வீதி ஊடாகச் சென்றதாக வவுனியா செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை -

நேற்றுக் காலை 7 மணி தொடக்கம் வவுனியா - மன்னார் வீதியில் விசேட இராணுவப் பிரிவினரால் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ஐ-5-164)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org